பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 10 வெள்ளிக்கிழமை (24.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :210

# ஒப்பந்தத்தில் இன்று காலை ஒப்பம்

# அதன் பின் நாடாளுமன்றில் விவாதம்!

## நோர்வேத் தூதுவர் கிளிநொச்சிக்கு நேரில் சென்று கையெழுத்துப் பெறுவார்

கொழும்பு,ஜூன்24

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பில் இலங்கை அரசுத்தரப்பும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பும் இன்று காலை ஒப்பமிடுகிறார்கள்.**

**கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று காலை கிளிநொச்சிக்கு விசேட ஹெலியில் சென்று விடுதலைப் புலிகளின் தரப்பில் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பத்தை நேரில் பெற்றுக்கொள்வார்.**

**ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடு இன்று முற்பகல் நாடாளுமன்றில் ஒத்திவைப்புவேளையில் இவ்விடயம் ஒரு பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடத்தப்படும்.**

இன்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசு தயாராக இருக்கிறது என்ற செய்தியை அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் நேற்றுக்காலை விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி சென்று புலிகளின் தரப்பிடம் தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் இரண்டாம் நிலைச் செயலாளர் ரொம் நப்ஸ்கொக் தலைமையிலான இருவர் குழுவே நேற்றுக் காலை விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்து இத்தகவலைத் தெரிவித்தது. ஒப்பந்தத்தில் புலிகளின் தரப்பில் ஒப்பத்தைப் பெறுவதற்காக இன்று காலை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சிக்கு வரவிருக்கின்றார்கள் என்ற

(02ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்கிரிய பீடாதிபதியிடம் நகலைக் கையளித்தார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,ஜூன்24

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அவசர அவசரமாக கண்டிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம புத்தரகித்த தேரரைச் சந்தித்துப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் விரிவான விளக்கமொன்றை அளித்திருக்கிறார்.

நேற்றுப் பிற்பகல் விசேட ஹெலிகொப்டர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நாடாளுமன்றம் வருவார் ஜனாதிபதி?

கொழும்பு,ஜூன்24

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனைகளை அரசு இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கவுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி இன்று நாடாளுமன்றத்துக்குச் சென்று சபை விவாதத்தை பெரும்பாலும் பார்வையிடக்கூடுமென

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் நேற்று பிரதமரைச் சந்தித்தார்

நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்றுக் காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சின்போது பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடி நிலை பிரகடனம்?

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு இன்று கைச்சாத்தாவதையொட்டி நாட்டில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு எதிராகப் பேரினவாதிகள் நாட்டை ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கையில் இறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதை முறியடிப்பதற்காக அரசு எந்நேரத்திலும் நெருக்கடிநிலையை பிரகடனப்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று நள்ளிரவு அரச அச்சக சுற்றாடலில் படையினர் கணிசமான அளவு குவிக்கப்பட்டிருந்தனர்.

இது நெருக்கடிநிலைப் பிரகடனம் தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவது சம்பந்தமான ஏற்பாடுகளுக்கு கட்டியம் கூறும் நிகழ்வாக இருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பின் நகல் வடிவம் இன்று 3 மொழிகளிலும் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

பொதுக்கட்டமைப்பு நகல் திட்டம் இன்று நாடாளுமன்றில் மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படும் என ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு யோசனைகள் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாடாளுமன்றில் விவாதத்துக்கு விடப்படுமா அல்லது அதற்கு முன்னர் விடப்படுமா என்று ஜே.வி.பியின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றுக்கு அரச எம்.பிக்கள் செல்வதற்கு இன்று ஹெலி வசதி!

கொழும்பு,ஜூன்24

உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கையில் அத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பியினர் இன்று நாடாளுமன்ற நுழைவாயில் பகுதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த முஸ்தீபு செய்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதையடுத்து, இன்று நாடாளுமன்றத்துக்குச் செல்லும் அரசுத்தரப்பு எம்.பிக்கள் இடையில் வழிமறிக்கப்படும் ஆபத்திருப்பதாகக் கருதும் அரசு, அவர்களுக்கு கொழும்பு நகரப்பகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு ஹெலிகொப்டர்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஆஸ்பத்திரிக்குள் 'உதயன்' பத்திரிகையாளர்கள் அவமதிக்கப்பட்ட சம்பவம்:

## சுகாதார அமைச்சு உடன் விசாரணை செய்து ஆண்தாதி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்

### வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ். ஆஸ்பத்திரிக்குள் செய்தி சேகரிக்கச் சென்ற 'உதயன்' ஊடகவியலாளர்கள் இருவர் தங்கள் பணியினைச் செய்யவிடாது தடுக்கப்பட்டு, பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்ட செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சு பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்தி சம்பந்தப்பட்ட ஆண்தாதி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

'உதயன்' பத்திரிகையாளர்கள் இருவர் யாழ். ஆஸ்பத்திரிக்குள் வைத்து அநாகரிகமாக நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் திங்களன்று பேரணி

யாழ்ப்பாணம்,ஜூன்24

தமிழர் வாழ்விடங்களிலிருந்து படையினரை வெளியேறுமாறு கோரியும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தைக் கண்டித்தும் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஊர்காவற்றுறையில் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.

தீவகம் வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் இந்தப் பேரணியை ஒழுங்குசெய்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளரை அவமதிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்

### யாழ். ஊடகவியலாளர் சங்கமும் கண்டனம்

'உதயன்' பத்திரிகையாளர்கள் இருவர் யாழ். ஆஸ்பத்திரிக்குள் வைத்து ஆண்தாதி உத்தியோகத்தர் ஒருவரால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கமும் கண்டித்திருக்கிறது.

இதுதொடர்பாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் -

யாழ். போதனா வைத்தியசாலையில் செய்தி சேகரிக்கச் சென்ற 'உதயன்' செய்தியாளரை செய்திசேகரிக்க விடாமல் வைத்தியசாலை நிர்வாகம் அவமதித்ததை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மனிதாபிமான சேவையில் ஈடுபடும் செய்தியாளர்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் பொலீஸாரிடம் முறைப்பாடு

யாழ். ஆஸ்பத்திரியின் 24ஆம் வார்ட்டுக்கு செய்தி சேகரிக்கச்சென்ற 'உதயன்' பத்திரிகையாளர்கள் இருவரை அங்கு கடமையில் இருந்த ஆண்தாதி ஒருவர் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளிய சம்பவம் தொடர்பாக ஆஸ்பத்திரி நிர்வாகம் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருப்பதாக அறியவருகின்றது.

யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் ரவிராஜ் எழுத்து மூலம் இந்த முறைப்பாட்டை செய்திருக்கின்றார் - என்றும் தெரிகின்றது.

'உதயன்' செய்தியாளர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரிக்குள் அனுமதி பெறாமல் அத்துமீறி நுழைந்து பணியாளரை கடமை செய்யவிடாது குறுக்கீடு செய்திருக்கின்றனர் என்பது உட்படப் பல்வேறு அவதூறான விடயங்கள் அந்த முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. (ஐ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




இலங்கை சமாதானப் பேரவையின் இயக்குநர் கலாநிதி ஜெஹான் பெரேரா பொதுக்கட்டமைப்புக் குறித்து நேற்று 'உதயன்' அலுவலகக் கேட்போர்கூடத்தில் உரை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படங்கள். யாழ். றோட்டறிக் கழக ஒன்றுகூடலில் அவர் இந்த விசேட விருந்தினர் உரையை 'பொதுக் கட்டமைப்பு உருவாகும் சாத்தியம் - அது குறித்த பிந்திய நிலை - தென்னிலங்கையின் பார்வை' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

ஜெஹான் பெரேரா உரையாற்றுவதையும் றோட்டறிக் கழகப் பிரதிநிதிகள் மற்றும் உரையை செவிமடுக்க வந்தோரில் ஒரு பகுதியினர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : தமிழினியன்)

# ஊர் பார்க்க யாழ். வந்தவரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜுன்24

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் பார்க்கவென வந்த நடுத்தரவயதுடைய ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

கண்டி மஸ்கெலியாவைச் சேர்ந்த 40 வயதுடைய முத்துச்சாமி சுந்தரராஜா என்பவரே காணாமற்போனவராவார்.

கண்டி மஸ்கெலியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் இம்மாதம் முதல் வாரத்தில் உறவினரைப் பார்வையிடுவதற்கென யாழ்ப்பாணம், நல்லூர், ராணி வீதிப் பகுதிக்கு வந்தனர் என்றும் - இவர்களுடன் குறிப்பிட்ட நபரும் யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்தார் என்றும் - கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் வந்த குறித்த நபர் கடந்த 22ஆம் திகதி காலை கடைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வெளியே சென்றார் என்றும்-

அதன்பின்னர் வீடுதிரும்பவில்லை என்றும்- முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி கேட்டுள்ளார்.

(எ-7)

# மரக்கிளைகள் கேபிள்களில் உராய்வதாலேயே மின்தடை!

யாழ்ப்பாணம்ஜுன்24

தற்போது வீசும் கடுங்காற்றினால் மரக்கிளைகள் மின்சாரக் கேபிள்கள் மீது உராய்வதாலேயே அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் எம்.அமிர்தலிங்கம்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. குறிப்பாக முன்னிரவு வேளைகளில் ஏற்படும் மின்தடையால் இல்லத்தரசிகள் சிரமங்களை அனுபவித்து வந்தனர். அத்துடன், ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பாதிக்கப்பட்டனர்.

இந்தநிலை குறித்து மின்சாரப் பொறியியலாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வீட்டுக் காணிகளுக்குள் வளர்ந்துள்ள பாரிய மரங்கள் வீதியோரங்களில் கிளை பரப்பி நிற்கின்றன. தற்போது வீசும் கடுங்காற்றினால் மரக்கிளைகள் முறிந்து மின்சாரக் கேபிள்கள் மீது விழுகின்றன அல்லது உராய்கின்றன.

இதுகுறித்து பல தடவைகள் அறிவுறுத்தியும் பொதுமக்கள் மரக்கிளைகளை வெட்டி அகற்றுவதில் அக்கறை காட்ட மறுக்கின்றனர். மின்சார சபை ஊழியர்கள் முடிந்தவரை இத்தகைய மரக்கிளைகளை அகற்றி விடுகின்றனர். ஆனாலும், பொதுமக்கள் ஒத்துழைக்காவிட்டால் மின்தடை ஏற்படுவதைத் தடுப்பது கடினமே.

ஆகவே இந்த விடயத்தில் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றார் அவர்.

(ஒ-117-ரி)

# ஒப்பந்தத்தில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலும் அப்போது புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் இந்தத் தகவலைப் பெற்றதும் உடனடியாக புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து அதனை அவருக்குத் தெரிவித்தார்.

அதையடுத்து இவ்விடயம் குறித்து தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து விவரம் தெரிவித்து அவரது ஆலோசனையையும் வழிகாட்டுதல்களையும் பெறுவதற்காக கிளிநொச்சியிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் - தலைவர் பிரபாகரன் தங்கியிருக்கின்ற - இடத்துக்கு தமிழ்ச்செல்வனும், புலித்தேவனும் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தச் சந்திப்பின்போதே இந்த ஒப்பந்தத்தில் புலிகள் தரப்பில் யார் ஒப்பமிடுவார்கள் என்ற விவகாரம் முடிவுசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை சுபநேரப்படி 7.04 மணியளவில் அரசுத் தரப்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் எனத் தெரிகின்றது. அதன் பின்னர் தூதுவர் பிரட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் ஹெலிகொப்டரில் புறப்பட்டு கிளிநொச்சிக்குச் சென்று அங்கு புலிகளின் பிரதிநிதியின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வர். அத்தோடு, ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிடும்.

இதற்கிடையில், இந்த ஒப்பந்த ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக கடந்த ஞாயிறன்று கொழும்பு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்றிரவு இந்தியாவுக்குப் புறப்படவிருந்தார். தமது இலங்கை விஜயத்தின் பெறுபேறுகளை இந்தியாவுக்கு விளக்குவதே அவரின் இந்திய விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஹெல்கிஸன் இங்கிருந்து புறப்பட்ட பின்னரே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தம் இன்று காலையில் இரு தரப்புகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பமிடப்பட்டதும் இன்று முற்பகலில் நாடாளுமன்றில் ஒத்திவைப்புவேளை பிரேரணையாக பொதுக் கட்டமைப்பு விடயம் முன்வைக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடைபெறும் எனக் கூறப்பட்டது.

ஒரு சட்டமூலமாக அல்லாமல் - ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக - இது முன்வைக்கப்படுவதால் இதன் மீது சபையில் வாக்கெடுப்பு ஏதும் நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் ஒத்திவைப்புவேளை பிரேரணையாக இன்று நாடாளுமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் என்ற தகவலை அரசுத் தரப்பு நேற்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

- இதனையடுத்து, இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிட்டது என்ற ஒரு கதை நாடாளுமன்ற எம்.பிக்கள் இடையே மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் ஏனைய இடங்களிலும் உள்ள பல்வேறு அரசியல் வட்டாரங்களிலும் பரவலாக அடிபட்டது.

ஆனால், ஒப்பந்தம் இன்று காலையே ஒப்பமிடப்படும் என்பது நேற்று உறுதியாகத் தெரிய வந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து இன்று முற்பகல் அது நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்படும் போது ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் அதையொட்டி சபையில் பெரும் ரகளை விளைவிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் ஏடாகூடமாக ஏதும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் அரசு தீவிரமாக இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

உத்தேச பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை அறிவிப்பதற்காகவும் அதனை மறுபரிசீலனைக்கு சமர்ப்பிப்பதற்காகவும் விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை நேற்றிரவு ஜனாதிபதி அழைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுன்24

வட்டுக்கோட்டை வடக்கு, அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலய நூதனப் பிரதிஷ்டா மகாகும்பாபிசேகமும் சங்காபிசேகமும் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளன.

காலை 6.20 மணி தொடக்கம் 7.40 மணி வரை கும்பாபிசேகமும் முற்பகல் 10 மணிக்கு சங்காபிசேகமும் நடைபெறும்.

கும்பாபிசேகத்தை முன்னிட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர்.

(எ-203)

★ ★ ★

வடமராட்சி,ஜுன்24

புலோலி வடமேற்கு, காந்தியூர் அருள்மிகு விநாயக வைரவர் ஆலய வருடாந்த வேள்வி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

(எ-173-203)

★ ★ ★

வரணி,ஜுன்24

வரணி வடக்கு, அரசு நின்றபுலம் பெரிய தம்பிரான் ஆலய மகாகும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.50 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவசித்தாந்தப் புலவர் சோ.குமரேசமூர்த்தி 'தம்பிரான் பெருமை' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(எ-170-203)

★ ★ ★

குருநகர்,ஜுன்24

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சுண்டுக்குளி புனித திருமுழுக்கு, அருளப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் புனிதரின் ஆசீரும் இடம்பெறும்.

(எ-51-203)

★ ★ ★

வடமராட்சி,ஜுன்24

புலோலி தெற்கு, குரும்பைகட்டி அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் வேள்வியும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

(எ-173-203)

★ ★ ★

நவாலி,ஜுன்24

சனிமாற்றத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்தில் விசேட கோமம்,பூசை,வேதமந்திரம் ஓதல் என்பன நடைபெறவுள்ளன.

நாட்டுமக்களின் வாழ்வுக்காகவும் நன்மைக்காகவும் இந்தப் பூசை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

(எ-100-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்24

நயினாதீவு செம்மனத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய திரிதள இராஜகோபுர மகாகும்பாபிசேகம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

காலை விநாயகருக்கு 1008 சங்காபிசேகம் நடைபெறும். இரவு விநாயகப்பெருமான் வீதியுலாவருதலும் நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும் இடம்பெறும்.

(ஒ)

# ஆஸ்பத்திரிச் சம்பவம் தொடர்பான வாசகர்களின் எண்ணக் கருத்துகள்

## ஓய்வூதியர் சங்கங்களின் சமாசம் கண்டிக்கின்றது

கடந்த செவ்வாய்க்கிழமை நயினை அம்மன் தேர்த்திருவிழாவில் கலந்துவிட்டுத் திரும்பிய பக்தர்களை ஏற்றிவந்த பஸ்ஸும் தனியார் போக்குவரத்து வாகனமும் வேலணைத் துறையில் விபத்துக்குள்ளாகி காயமடைந்தோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் செய்தியாளர்கள் வைத்தியசாலையில் கையாளப்பட்ட விதம் மிகவும் கண்டனத்துக்குரியது.

இக்கட்டான எல்லாக் காலங்களிலும் இந்த மண்ணில் இருந்து எமது மக்களுக்கு அரும் பணியாற்றிய வைத்தியசாலையைச் சேர்ந்தவர்களும் எமது மண்ணினதும் மக்களதும் துன்ப துயரங்களையும் அவர்களுக்கு இழைக்கப்படும் ஒவ்வொரு அநீதியையும் தைரியத்துடன் வெளிகொண்டுவந்த பெருமைக்குரிய உதயன் பத்திரிகையும் முரண்படும் சூழ்நிலை உருவாகியமை மிகவும் வருத்தத்துக்குரியது.

வைத்தியசாலைச் செய்திகளை நாளாந்தம் அங்கிருந்து சேகரித்துவெளியிடும் உதயனுக்கு இந்த நாளில் மட்டும் ஏன் இப்படி நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. இப்படியான அவலங்கள் ஏற்படும்போது அதன் விவரங்களை அறிய சகல மக்களும் ஊடகத்தையே நம்பியிருக்கும் நிலை உணரப்படாததும் கவலைக்குரியது. வழமைபோல காயப்பட்டவர்கள் மற்றும் மரணமடைந்தவர்களின் விவரத்தை உதயன் செய்தியாளர்களுக்கு வழங்குவதிலோ அல்லது அவர்கள் அவற்றைத் தாமாகப் பெற்றுக்கொள்வதிலோ தடைபோடும் விதத்தில் இந்த அசம்பாவிதத்தை உருவாக்கியவருக்கு என்ன பிரச்சினை இருந்திருக்கும் என்று எண்ணமுடியாது. ஏதாவது பிரச்சினை இருந்திருந்தால் கூட அவை அன்பான தொடர்பாடல் மூலம் கையாளப்பட்டிருக்கலாம்.

**சீ.வீ.கே.சிவஞானம்**

தலைவர், வடபிராந்திய ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம்.

## 'உதயன்' ஆசிரியருக்கு ஆஸ்பத்திரியில் அன்று நேர்ந்த அவலத்தை மறக்கமுடியுமா?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உதயன் பத்திரிகைக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டதை வாசித்தேன். சில வருடங்களுக்கு முன் 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடந்த கதியை ஆங்கிலப் பத்திரிகையில் வாசித்தது ஞாபகம் வந்தது.

விபத்தில் சிக்கிய 'உதயன்' பத்திரிகை ஆசிரியருக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சரியாக சிகிச்சை செய்யாமல் விட்டதாக அதில் எழுதியிருந்தது. வைத்தியர் ஒருவரின் தவறை உதயன் பத்திரிகையில் எழுதியதால் அந்த வைத்தியர், பத்திரிகை ஆசிரியருக்கு வேண்டும் என்றே சரியாக வைத்தியம் பார்க்கவில்லை என்று எழுதியிருந்தது.

அப்போது ஒரு வைத்தியர் விட்ட பிழைக்காக வைத்தியசாலைக்குக் கெட்டபெயர் வராமலிருக்க அந்த விஷயத்தை 'உதயன்' பெரிதாக்காமல்விட்டது என்று நினைக்கிறேன். ஆனால், அதுதான் வைத்தியசாலைக்குள் அவர்கள் எதுவும் செய்யலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது போல் இப்போது தெரிகிறது.

தவறு செய்யும் அலுவலரைத் தட்டிக் கேட்காத மேலதிகாரி இருக்கும் வரை வைத்தியசாலைக்குச் செல்லும் பொதுமக்கள்பாடு கஷ்டம்தான். ஒரு மேலதிகாரி, ஊழியர் ஒருவர் தவறு செய்யும்போது தட்டிக்கேட்க தயங்குகிறார் என்றால் அது குறித்தும் பல சந்தேகங்கள் எழுகின்றன.

வைத்தியசாலையில் நடைபெறும் தவறுகளை மறைக்கவும் இப்படி நடைபெறலாம்.

**சிவநாயகம்.**

மட்டுவில்.

# இன்று நாடு தழுவிய எதிர்ப்புப் போர்!

## ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு,ஜூன்24

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றையதினம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பி. நேற்று சூளுரைத்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பு யோசனை இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்ததையடுத்து, ஜே.வி.பி. நேற்றுப்பகல் அவசர அவசரமாகச் செய்தியாளர் மாநாடொன்றைக் கூட்டியது. இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, எம்.பிக்களான விஜித்த ஹேரத், அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சோமவன்ஸ அமரசிங்க கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்பு யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதிக்கும் அதேசமயம், அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் அரசாங்கம் தயாராகிவருகிறது. இதனை நாங்கள் வன்மையாக எதிர்ப்பதுடன் அதற்காக எதிர்ப்புச் செயற்பாடுகளில் ஈடுபடவும் தயாராகவே இருக்கின்றோம்.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை நாடளாவியரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம். நாடாளுமன்றத்தில் இதற்கு நாம் எதிர்ப்பினை வெளியிடுவதுடன் அரசாங்க நிறுவனங்கள் அனைத்திலும் குறிப்பாக வங்கி, துறைமுக சேவைகளில் நாம் எமது எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். நாடளாவிய ரீதியில் இது மேற்கொள்ளப்படும்.

அரசின் உத்தேசத் திட்டத்துக்கு மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்தில் நாடு முழுவதும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும்.

நாட்டையே ஸ்தம்பிக்கவைக்கும் எமது நடவடிக்கைகளின் மூலம் மக்களின் உணர்வலைகளை அரசுக்கு உணர்த்துவோம்.

இவ்வாறு சோமவன்ஸ அமரசிங்க மேலும் கூறினார். (எ-க)

# மாகாண சபைகளின் எதிர்க்கட்சி வரிசையில் ஜே.வி.பியினர்

கொழும்பு,ஜூன்24

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து வெளியேறிய ஜே.வி.பி. மாகாண சபைகளில் நேற்று எதிர்த்தரப்பு வரிசையில் அமர்ந்துகொண்டது.

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கென விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அரசு உ[illegible]க்க உத்தேசிக்கும் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டமைப்பை விட்டு ஜே.வி.பி. வெளியேறியது. மத்திய அரசில் அது ஏற்கனவே எதிர்த்தரப்பு வரிசையில் அமர்ந்துகொண்டுள்ளது.

எனினும் ஜே.வி.பி. கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றபின் மாகாண சபைகள் முதல் தடவையாக நேற்றுக் கூடின. அப்போதே ஜே.வி.பி. மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் சென்று அமர்ந்துகொண்டனர். சப்ரகமுவ, ஊவா, மத்தி ஆகிய மாகாண சபைகளின் அமர்வுகள் நேற்று ஆரம்பமாகின. இதன்போது ஜே.வி.பி. உறுப்பினர்கள் அனைவரும் எதிர்கட்சி வரிசையிலேயே அமர்ந்திருந்தனர்.

சப்ரகமுவ மாகாண சபையில் ஜே.வி.பி.யினருக்கு 10 ஆசனங்களும் மத்திய மாகாண சபையில் 9 ஆசனங்களும் ஊவா மாகாண சபையில் ஏழுபேரும் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# ஜனாதிபதிக்கு எதிராக ஹெல உறுமயவினர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முஸ்தீபு!

## நேற்றுச் சபையில் அறிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து ஜனாதிபதியை அந்தப் பதவியிலிருந்து விரட்டியடிப்பதற்கான நடவடிக்கையில் ஜாதிக ஹெல உறுமய ஈடுபடப் போவதாக அக்கட்சியைச் சேர்ந்த வண. எல்லாவல மேதானந்த தேரர் எம்.பி. நேற்று நாடாளுமன்றில் சூளுரைத்தார்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுவிட்டது என்று உறுதிப்படுத்தப்பட்ட நிமிடத்திலிருந்து இதுதொடர்பான தமது செயற்பாட்டைத் தாங்கள் ஆரம்பிக்கப்போகிறார்கள் என அடித்துக் கூறினார் அவர்! இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இரண்டு விடயங்களுக்கு உடனடியாகத் தயாராகுமாறு தேசப்பற்றாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கவுள்ளோம்.

ஒன்று - ஜனாதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை.

அடுத்தது - உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை.

இந்த இரண்டு விடயங்களையும் முன்வைத்து ஜாதிக ஹெலஉறுமய நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தைத் தொடங்கவுள்ளது.

நாட்டுப்பற்றாளர்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க அணிதிரளவேண்டும் இந்த நாட்டுக்கு ஏற்படப்போகும் ஆபத்துக் குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய காலகட்டத்துக்கு வந்திருக்கின்றோம்.

எமது பௌத்த தேசத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை எமக்கு உள்ளது. ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவு இந்தப் பௌத்த நாட்டுக்கு பெரும் ஆபத்தை உண்டுபண்ணியுள்ளது.

சமாதானம் என்பது என்னவென்று தெரியாத புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சமாதானம் என்பது எப்படியானது, அது எப்படியிருக்கும் என்பது பற்றி நாம் போதிக்கவேண்டும்.

நாட்டுக்காக தேசப்பற்றுடன் செயற்பட்ட இராணுவ அதிகாரிகளை வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேற்றி அவர்களை கொழும்பில் முடக்கிவைக்கும் ஒரு வழிமுறையை ஜனாதிபதி செய்துவருகிறார்.

அண்மையில் திருகோணமலையிலிருந்து ஒரு முக்கிய கடற்படை அதிகாரியை வேறு இடத்துக்கு மாற்றியிருக்கின்றார். எனவே, இராணுவத் தளபதிகள் ஜனாதிபதிக்கு எதிராக அணிதிரளவேண்டும் என இந்தச் சபையில் கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். - என்றார் அவர். (எ-க)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர்நிகழ்வில் இன்று புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசனின் 'அறநெறி' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நற்சிந்தனை, பாடல், பேச்சு, கரகாட்டம், வில்லிசை போன்ற நிகழ்வுகள் நடைபெறும். (எ-203)

## கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

நீர்வேலி தேவி கண்ணாடித் தொழிற்சாலையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி ஆலய சனசமூக நிலையத்தில் நடை பெறவுள்ளது. (எ)

# கடலில் மூழ்கி மாணவர் மரணம்

வல்வெட்டித்துறைக் கடலில் மூழ்கி மாணவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். அதே பகுதியைச் சேர்ந்தவரான கணேசரட்ணம் பிரேம்நாத் (வயது-19) என்பவரே இறந்தவராவார்.

இவர் சக நண்பர்கள் மூவருடன் கட்டுமரத்தைக் கட்டுவதற்காக நேற்றுப்பகல் கடலுக்குச் சென்றனர் என்றும் -

கரையிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் கட்டுமரத்தை கட்டிவிட்டு கரையை நோக்கி நீந்திய போது பிரேம்நாத் நீரில் மூழ்கினார் என்றும்-தெரிவிக்கப்பட்டது. இறந்தவர் சிதம்பராக் கல்லூரியில் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் கற்று வருகிறார். இவர் தற்போது நடைபெற்றுவரும் உயர்தரப் பரீட்சையில் தோற்றிவருகிறார். இந்த மரணம் குறித்து பருத்தித்துறை நீதிவான் ஏ.அரியநாயகம் மரணவிசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். இதனை அடுத்து பருத்தித்துறை வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் பிரேத பரிசோதனை நடத்தினார். (ழ)

# ஈராக்கில் குண்டுவெடிப்பு; 40 பேர் பலி; 50 பேர் காயம்!

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற பல்வேறு குண்டுவெடிப்புகளில் சுமார் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஷியா முஸ்லிம்கள் வாழும் மாவட்டத்தில் மட்டும் 5 குண்டுவெடிப்புகள் இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புகள், ஈராக்கின் வளர்ச்சிக்காக பிரெஸல்ஸ் நகரின் அமெரிக்கா மற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள் பங்கேற்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடத்தப்பட்டது என அல்கெய்டா தீவிரவாத அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் கடந்த இரு மாதங்களாக அல்கெய்டா தீவிரவாத அமைப்பு தீவிரத் தாக்குதல்களை மேற்கொண்டுவருகிறது. இந்தத் தாக்குதல்களுக்கு குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பின் ஈராக் இணைத்தலைவர் அபு முஸாம் அல் சர்காவியே மூலகாரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு மாதங்களாக ஈராக்கில் இடம்பெற்றுவரும் தாக்குதல்களில் சுமார் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 120 பேர் அமெரிக்கப் படையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா - திபெத் ரயில் பாதை உஷ்ணத்தால் சேதம்?

வெப்பநிலை அதிகரித்து வருவதால் உலகின் கூரை என்று வர்ணிக்கப்படும் திபெத்தையும், சீனாவையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுவரும் கிங்காய் சிபெக் ரயில்வே பாதை சேதமடையலாம் என காலநிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பனிபடலம் ஆழ்ந்த திபெத் மேட்டு நிலத்தில் அமைக்கப்படுகின்ற 1,270 மீற்றர் நீளமான ரயில் பாதையின் கட்டுமான வேலைகள் 2050ஆம் ஆண்டளவில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் உலகின் வெப்பநிலை 3.4 செல்சியஸால் அதிகரிக்கக்கூடும். அவ்வாறு நிகழ்ந்தால் தண்டவாளத்தின் கீழேயுள்ள பனிக்கட்டிகள் உருகிவிடும் எனக் கருதப்படுகிறது.

## உலக அரங்கில்

## புடின் நவம்பரில் ஜப்பான் விஜயம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

ஜப்பான் பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமியைச் சந்தித்து பேச்சுகள் நடத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதம் 18, 19ஆம் திகதிகளில் தென்கிழக்காசிய நாடுகளின் உச்சி மாநாடு தென்கொரியாவில் நடைபெறவுள்ளது. அங்கு விஜயம் செய்யும் தருணத்தில் இரு தலைவர்களும் சந்திப்பர் என்று இருநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர். (க)




# ஜி.8 மாநாடு நேற்று ஆரம்பம்

லண்டன்,ஜூன்24

உலகின் செல்வந்த நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி.8 அமைப்பின் மாநாடு நேற்று லண்டனில் நடைபெற்றது.

சமாதானத்தை நிலைநாட்டுவதை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்த மாநாட்டை இந்த ஆண்டு ஜி.8 அமைப்பிற்கு தலைமை வகிக்கும் பிரிட்டன் ஏற்பாடு செய்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் கொண்டலிஸா ரைஸும் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் மத்திய கிழக்கின் சமாதான நடவடிக்கைகள் - குறிப்பாக காஸா பள்ளத்தாக்கிலிருந்து வாபஸ்பெறும் இஸ்ரேலின் திட்டம் - என்பன குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

காஸா நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டு 5ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மீண்டும் மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்ட இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததென்று பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான சமாதான அனுசரணையாளர்களாகச் செயற்படும் உலக வங்கியின் முன்னாள் தலைவர் ஜேம்ஸ் வில்பன்ஸன் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டுக்கு முன்னதாக அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கியநாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்கள் முக்கிய சந்திப்பொன்றை நடத்தினர். இதன் பின்னரே இந்த மாநாடு ஆரம்பமானது.

ஜி.8 நாடுகளைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர்கள் அடுத்த மாதமும் கூடி ஆராயவுள்ளனர். அதன்போது ஆபிரிக்காவின் வறுமை ஒழிப்புக் குறித்து ஆராயப்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் கூறினார்.

# ஆழிப்பேரலையில் சிக்கியோருக்கு நுரையீரல் தொற்று ஏற்பட்டுள்ளது

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைத் தாக்கிய ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வழக்கத்துக்கு மாறாக நுரையீரல் தொற்று, சளிச்சுரத்தை ஏற்படுத்தியுள்ளது. சிலருக்கு பக்கவாதத்தை ஏற்படுத்தக்கூடிய மூளைக்கிருமித் தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் லண்டனில் இருந்து வெளியாகும் மருத்துவ சஞ்சிகையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பலர் மண்ணில் அதிகளவு காணப்படும் பற்றீரியா நுண்ணுயிர்கள் வாழும் உவர்நீரை சுவாசித்ததாலேயே இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பலருக்கு சிகிச்சை அளித்ததாக பாங்கொக் நகரில் இயங்கும் ராஜவீதி மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க வேவு விமானம் விபத்து

வாஷிங்ரன்,ஜூன்24

தென்மேற்கு ஆசியாவில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்ட தமது யு-2ரக விமானமொன்று விபத்துக்குள்ளானதால் விமானி உயிரிழந்தார் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படையினருக்கு ஆதரவாக வேவு நடவடிக்கையை முடித்து, தளத்திற்கு திரும்பிய வேளையே இந்த விமானம் விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்புக் கருதி விமானம் எங்கு விபத்துக்குள்ளானது என்பது குறித்த விவரங்களை தெரிவிக்கமுடியாது என்று அமெரிக்க இராணுவத்தரப்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒற்றை ஆசனத்தைக் கொண்ட இந்த விமானம் மிகஉயரத்தில் பறக்கவல்லது. முக்கிய மீன் இடங்களை படமெடுப்பதற்கும்; புலனாய்வுத்தகவல்களை சேகரிப்பதற்கும் இந்த விமானம் பயன்படுத்தப்பட்டது.

பாதுகாப்பு ரகசியங்கள் மற்றும் தலைமறைவாகச் செயற்படுதல் போன்ற காரணங்களினால் இந்த விமானத்தின் செயற்பாடுகள் குறித்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விபத்து தொடர்பான புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள எல்லா விதமான கடைகளுக்கும் ஏற்ற சோக்கேஸ், மேசை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.தங்கேஸ், 26, wyman Road, யாழ்ப்பாணம். T.P.: 0777 830562 (பார்வையிடும் நேரம் காலை 9 மணி - மாலை 4 மணிவரை). (36892)

## உடன் விற்பனைக்கு

பாவனையிலுள்ள கொம்பியூட்டர் P2, P3, P4, மொனிற்றர், எப்சன் பிரிண்டர், LQ 300 + ஓடியோ டெக் (AKAI) பனசொனிக், ரெலிபோன் றிசீவர், ஈகுலைசர் விற்பனைக்குண்டு. தொடர்பு: அபிராமி, இல.768, K.K.S. றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். T.P.: 8044 (36891)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி ஆடியபாதம வீதியில் சந்தைக்கு நல்ல சூழலில் 4 பரப்புக் கொண்ட வீடு உடனே விற்பனைக்குண்டு. Contact Telephone: 011 - 2501363. (சி-43611)

## வீடு வாடகைக்கு

வோல்ட்டன் இடம், தும்பளை - பருத்தித் துறையில் விசாலமான காணியில் அமைந் துள்ள வீடு வாடகைக்குண்டு (அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது). தொடர்புகளுக்கு: T.P.: 0773107578, மின் அஞ் சல்: jab-srilanka@hotmail.com (36703)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 27.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டை மானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூரிலும் பெற்றுக் கொள்ளலாம். (36569)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, நியூஸிலாந்து குடியுரிமை, 1971, பரணி, மேட ராசி, 5'10" உயரம், 34 பாவம், A/L கம்பியூட்டர் சயன்ஸ் மணமகனுக்குப் படித்த, அழகான மணமகளும் கனேடிய குடியுரிமை, 1974, அச்சுவினி, மேட ராசி, 12இல் செவ்வாய், வியாபார முகாமைத் துவம், 5'10" உயரம், 31¼ பாவம் உள்ள மண மகனுக்கும் செவ்வாய் 2, 4, 12இலுள்ள, படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு "சிவாலயா", 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021 222 7844. (36894)

## தவறிவிட்டது

காணி உறுதி ஒன்றும் சில முக்கியமான ஆவணங்களும் கடித உறையுடன் கடந்த 21-06-2005 செவ்வாய்க்கிழமை திருநெல்வேலிச் சந்தைக்கும் ஆடியபாத வீதி, காளிகோயில டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கள் சிவகாமி ரேடர்ஸ் (திருநெல்வேலிச் சந்தை முன்பாக) கடையில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். T.P.:222 2965. (36861)

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(36903) தொடர்பு: 021 4590678.

## தவறிவிட்டது

பாலேந்திரன் ஜெயதீபன் ஆகிய எனது தே.அ.அ. 770804272V, வீ.அ.அ. 090702022 ஆனைக் கோட்டைச் சந்திக்கும் மூத்தவிநாயகர் கோயில் பின் வீதிக்கும் இடையில் பேர்ஸுடன் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776057128 எனும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 0776057128
(36879)

## மணமகள் தேவை

இந்து குடும்பம், வயது 31, நட்சத்திரம் திருவோணம், மகர ராசி, செவ்வாய்க் குற்றம் இல்லை. கல்வி B.Sc. Bio Chemistry - லண்டனில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் அழகான வாலிபருக்கு, A/L சித்தியடைந்த, அழகான மணமகள் தேவை. பெண்ணுக்கு செவ்வாய், சூரியன் ஒரே வீட்டில் இருக்கவேண்டும் அல்லது செவ்வாய் இருக்கும் வீட்டிலிருந்து சூரியன் 4ஆம் வீடு, 7ஆம் வீடு, 8ஆம் வீட்டில் இருப்பது விரும்பத்தக்கது. உத்திரட்டாதி, ரேவதி நல்ல நட்சத்திரங்கள். புகைப்படம், ஜாதகக்குறிப்புடன் வாருங்கள் சந்திக்கும் நேரம் மாலை 3.00 - 5.00 (தரகுப் பணம் இல்லை)

தொடர்பு: பொ.பாலச்சந்திரன்
(இளைப்பாறிய உள்ளூராட்சி அரச உத்தியோகத்தர்) (36813)
Church Lane, K.K.S. Rd., Kokuvil East, Kokuvil.

## கருத்தரங்கு

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரியிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக கப்பட்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலை உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவிருப் பதால ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-75)

## வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை

### பொதுக்கூட்டம் - 2005

மேற்படி பொதுக்கூட்டம் 2005.06.26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.00 மணிக்கு மூ.விநாயகமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத் தில் (உரும்பிராய் இந்துக்கல்லூரி முன்பாக) நடைபெறவுள் ளது. புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறும்.

எனவே, அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது வருகை தரவும். கோயிலுக்குச் செல்வதற்கு விருப்பமுள்ளவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வந்து பதிவுசெய்து கொள்ளவும்.

பொ.பத்மநாதன்
செயலாளர்.

(36901) (39-14-45-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியை
திருமதி சுரேஜினி நவராஜா அவர்களின்
பாசமிகு தாயாரும்
பிரதி அதிபர் P.W.நவராஜாவின் மாமியாருமாகிய
**திருமதி மேரிமாகிறெட் மரியநாயகம்** அவர்களின்
திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியடைவதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

யா/புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்,
ஊர்காவற்றுறை.

(36873) (24-14-45-26)

Sri Lankan - German Development Cooperation
Ministry of Relief, Rehabilitation & Reconciliation
kfw gtz

NRP
Northern Rehabilitation Project

# VACANCY

GTZ-NRP invites applications from suitable candidates for the following position at their Jaffna office on a contractual basis:

**Documentation Officer**

**Main tasks**

1. Preparing reports on daily, weekly and monthly basis
2. Translation from English to Tamil and vice versa
3. Preparing presentations in Power Point

**Requirements**

1. An excellent command of written and spoken English (additional command in Sinhala is preferable)
2. Preferably with a minimum of 5 years experience in a similar capacity
3. Computer literacy with thorough working knowledge of MS office packages
4. Suitable training in documentation functions and distinct ability to work independently and as part of a team.

**Please forward your CV together with names of two non related referees and a contact number on or before 29th June 2005.**

Senior Advisor
GTZ-NRP 472, Main Street, Jaffna.

(C/43615)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 1938 - 03 - 16

ஆண்டவன் அடியில் 2005 - 05 - 25

### திருமதி லில்லி நேசமலர் தேவராசா

(தேவராசா ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, காங்கேசன்துறை அமெரிக்கன் மிசன் பாடசாலை, ஊறணி கனிஷ்ட வித்தியாலயம், வட்டு. மத்திய கல்லூரி)

அம்மா எங்களை ஏங்கவிட்டு
நீங்கள் சென்றதுதான் எங்கே?
வானகம் சென்றீர்களா?
நீங்கள் வாழ்ந்து முடியுமுன்
வாழும் எங்களைப் பார்க்காது
வானகம் சென்றீர்களா?
அல்ல அல்ல ஆண்டவன் உங்களை
அழைத்தல்லோ சென்றுவிட்டார்!

அன்னாரது இல்லத்தில் நாளை (2005-06-25) நடைபெறும் வழிபாட்டி லும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

நவாலி றோட், குளத்தடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (36907)(26-14-45-26)

## வாழ்த்துகின்றோம்

மணிவிழாக்காணும் எம் அன்னை

### திருமதி ச.காங்கேயனை



நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
மங்காப் புன்னகையும் கடமையிலே
கண்ணாயும்
நல்லோர் மனங்களில் நிறைந்த
அன்னையாயும்
விளங்குகின்ற எம் அன்னை நீடூழி
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

யா/கலட்டி மெ.மி.த.க.
பாடசாலை. (36899) (24-14-45-26)

## பதவி வெற்றிடம்

லண்டனில் பல கிளைகளைக் கொண்ட MAK COST CUTTER நிறுவ னத்திற்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற உதவிக்கணக்காளர், கணக்குப் பதியுநர் பணிகளுக்கு ஆள்கள் தேவை.

தகைமையுடையவர்கள் LONDON ENGLISH COLLEGE இல. 105, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு உரிய ஆவணங்களுடன் 25-06-2005 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நேரில்வரவும்.

- ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்
- வயதெல்லை (20 - 35)

கல்வித் தகைமை: வணிக, முகாமைத்துவப் பட்டதாரிகள் (B.Com. or B.B.A.) அல்லது G.C.E.A/L வணிகத்துறையில் ஒரே அமர்வில் 02 திறமைச் சித்திகளுடன் ஒரு சாதாரண சித்தியும் கணக்கியலுக்கான HNDA அல்லது கணக்குப் பதிவுநர் (Book Keeper) சான்றிதழுடன் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

பிற தகைமைகள்: ஆங்கில அறிவு
கணனி (M.S. Office) (அவசியமானது)

(சி-43610)(26-14-45) - நிர்வாகி.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் இயக்குநர் சபை உறுப்பினரான
அரசாங்க நில அளவையாளர் லயன் அ.கமலசேகரம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சிவபாக்கியம் அருளம்பலம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களது
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C/43609)(46-14-45-26) உரும்பிராய் லயன்ஸ் கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணர் இராமச்சந்திரன்

(ஓய்வுபெற்ற அலுவலர், காணி உறுதிப்பணிமனை, யாழ். கச்சேரி)



தொல்புரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் இராமச்சந்திரன் 23-06-2005 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணா - நாகம்மாவின் அன்பு மகனும் தவமணிதேவி யின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கனக சபை மற்றும் மகாலட்சுமியின் அன்பு மருமக னும் தங்கேஸ்வரி (நோர்வே), சிவநேசன், ஜெபநேசன் (சுவிஸ்), அருள்நேசன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தன் (நோர்வே), இந்துமதி, விசித்திரா (சுவிஸ்), சியாமளா (கனடா), சிவகுமார் (யாழ்.காரை. சிற்றூர்திச் சாரதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதித்தியன், தரணி, அர்ச்சயா ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25-06-2005) நாளை சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு நவாலி இந்துமயானத்திற்கு அவரது பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டுத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ.தவமணிதேவி (மனைவி),
இ.அருள்நேசன் (மகன்),
சி. ஜெகதீஸ்வரி (மகள்),
ச.சிவகுமார் (மருமகன்).

தொல்புரம் மத்தி, சுழிபுரம். (36902)(26-14-45)

## அரியகுட்டி சவீனம்மா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பி ராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரிய குட்டி சவீனம்மா அவர்கள் 21-06-2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னாச்சி - சின்னத்தம்பியின் மகளும் காலஞ்சென்ற வைரவீ அரியகுட்டியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான இராசையா மரியம்மா மற்றும் பொன் னம்மா, இராசம்மா, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சற்குணம் மற்றும் செபமாலை அம்மா, நெல்சன் (கனடா), சிறில் (கனடா), ரதி (றோஸ்மலர்) ஆகியோரின் பாசமிகு அன்னையும் மனோகரி (கனடா), காலஞ்சென்ற அன்ரனி மற்றும் சந்திரா (கனடா), டெய்சி (கனடா), எமலியான்ஸ் (ராஜா ஸ்ரோஸ், உரும்பிராய்) ஆகியோரின் அருமை மாமியாரும் சுரேஸ் (லண்டன்), திருமதி சிறி சுபா (கனடா), பபிதா, பகீரதன் (கனடா), திருமதி ஜெகன் சுஜிதா (கனடா), சிந்துஜா (கனடா), தனுஷியா (கனடா), சஞ்ஜீவ் (கனடா), ஜினிற்றன் (கனடா), ஜினோஜன் (கனடா), டிலக்ஷன் (கனடா), ருஜெய்க்கா (கனடா), பிரியங்கா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சின்டி (கனடா), சிலின் (கனடா) ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (24-06-2005) இன்று பி.ப 3 மணியளவில் இல.05, இராசாவின் தோட்டம், ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து யாழ்.அடைக்கல அன்னை ஆல யத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனை செய்யப்பட்டு பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
சிறில் (மகன்).

இல.05, இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம். (36904)(46-14-45-26)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இறுதிநேரத்திலும் இழுபறி

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தை இன்று நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் ஒரு பிரேரணையாகச் சபையில் சமர்ப்பிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது. அவ்விவகாரம் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடக்கும். ஆனால், அதன் மீது வாக்கெடுப்பு நடக்காது. அப்படித்தான் ஏற்பாடு.

அதுவும்கூட தென்னிலங்கை அரசியலுக்கான ஒரு கண்துடைப்பு நாடகம்தான்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தை நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் இணக்கத்தோடு செய்யும்படி பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் ஜனாதிபதி குமாரதுங்கவிடம் நேரில் தெரிவித்திருந்தனர் என்பது தெரிந்ததே. அப்போது அவர்கள் முன்னிலையில் தலையாட்டிய செயலுக்காக இப்போது ஒரு சாட்டுக்காகவேனும் நாடாளுமன்றத்துக்கு அதனைக் கொண்டுவரவேண்டிய இக்கட்டு அவருக்கு. அதையொட்டியே இந்த ஏற்பாடு.

இன்று ஒத்திவைப்புவேளை பிரேரணையாகப் பொதுக் கட்டமைப்பு விடயம் நாடாளுமன்றத்துக்கு வரும் சமயத்தில்கூட அந்தக் கட்டமைப்பு உடன்பாடு தொடர்பான நகல் வரைபு - வடிவம் - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முழுதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்குமா என்பது தெரியவில்லை. அல்லது முழுதாகத் தெரியாத ஓர் ஏற்பாடு குறித்து நாடாளுமன்றம் இன்றே விவாதம் நடத்தி முடிக்குமோ தெரியவில்லை. நகல் வடிவத்தை இன்று சபையில் சமர்ப்பிப்போம் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தப் பத்தியில் பலதடவைகள் நாம் சுட்டிக்காட்டியமை போன்று, சட்டுப்புட்டென்று இந்த விடயத்தை ஒப்பேற்றி முடிக்காமல் தொடர்ந்தும் இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி. அதனால் இந்த விடயம் மேலும் மேலும் சிக்கலாகிக்கொண்டிருக்கின்றது.

இப்போதும்கூட இந்த விடயத்தில் எவ்வளவு தூரம் இழுக்கலாமோ அவ்வளவு தூரம் இழுத்தடிக்கும் கைவரிசையையே அவரும் அவரின் அரசுத் தரப்பினரும் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்களின்போது பரிமாறப்பட்ட பல்வேறு ஆவணங்களில் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை பல உள்ளன. அவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு விடயத்தைப் பேசி, முடித்து, ஒப்பேற்றி, முற்றுப்புள்ளி வைப்பதை விடுத்து, வேறுவேறு புதுப்புது விடயங்களை அவற்றுக்குள் செருகி நிலைமையைச் சிக்கலாக்கி, இழுத்தடிக்கும் போக்கே அரசுத் தரப்பில் தொடர்கின்றது. அதில் ஒன்றுதான் முஸ்லிம் விவகாரம்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகச் சில முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குத், தவறான நம்பிக்கையூட்டி, அதற்கு இடமளித்தவர் ஜனாதிபதிதான் என்பது எல்லோருக்கும் தெரிநத விடயம்.

பொதுக்கட்டமைப்பில் ஒப்பமிடப்போகும் இரண்டு தரப்புகளில் ஒன்றான விடுதலைப் புலிகளின் தலைமையோடு முஸ்லிம்களின் தலைவர்கள் தாமே என்று கூறிக்கொள்ளுபவர்கள் யாரும் இந்த விவகாரம் குறித்து இன்னும் பேசவேயில்லை. அவர்கள் எல்லோரும் இந்த விடயம் குறித்தும், அது தொடர்பான தமது ஆதங்கங்கள் குறித்தும் அடுத்த தரப்பான - அரசுடன்தான் - குறிப்பாக அரசுத் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்கவுடன்தான் - பேசிக்கொண்டிருந்தார்கள்; பல சுற்றுத்தொடர் பேச்சுகளை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆழிப்பேரலை தாக்கி இந்த ஆறு மாதம் முடியும்வரை மாறி மாறி முஸ்லிம் தலைவர்களை அழைத்து அவர்களுடன் இந்த விவகாரம் குறித்து 'குசுகுசு' பேச்சு நடத்திக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது இறுதிக்கட்டத்தில் விடயத்துக்கான பொறுப்பை புலிகள் பக்கம் திருப்பி - இந்த விடயத்தில் பந்தைப் புலிகளின் களத்துக்குள் அனுப்பிவிட்டமாதிரிக் காட்டி - நோர்வே அனுசரணையாளர்களையும் கிளிநொச்சிப் பக்கத்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

கடைசி நேரம்வரை முஸ்லிம் தலைவர்களுக்குத் தாலாட்டுப்பாடி, தனது அரசியல் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்துவிட்டு இப்போது விடயம் தலைக்கு வநததும், பொறுப்பு புலிகள் பக்கம் என்று அந்த விடயத்தை - சுமையை - புலிகளின் தலையில் இறக்கப்பார்த்தார் ஜனாதிபதி.

ஆனால, நோர்வேத் தரப்பினருக்கு - கூறவேண்டியதை கூறுகின்ற முறையில் கூறி - அவர்களது தலையிலேயே பந்தைக் கட்டி அனுப்பி, ஜனாதிபதியின் களத்தில் மீளவும் கொண்டுபோய் இறக்கவைத்துவிட்டார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

சரியான தலைமைகள் இல்லாததால் - அபிவிருத்தி என்ற பெயரில் பிரதேச ரீதியில் கிளம்பியவர்களைத் தமது தலைவர்களாக்கிய முஸ்லிம் மக்களின் செயற்பாட்டால் - அவர்களும் பதவி சுகத்துக்காக ஒன்றுபடத் தவறிய துரதிர்ஷ்டத்தால் - யாருடன் கூட்டுச்சேர்ந்து செயற்பட வேண்டும் என்ற விவஸ்தை மறந்து முஸ்லிம் தரப்பு செயற்பட்டதால் - இன்று பொதுக்கட்டமைப்புப் போன்ற விடயத்தில், முஸ்லிம்களின் நிலைமை டெனிஸ் பந்துபோல களத்துக்குக் களம் மாறிமாறி அடிபடும் நிலைக்குப் போயிருக்கின்றது. தனது சுய அரசியல் லாபம் கருதியே இழுத்தடிப்பு செயற்பாட்டுக்கும் முஸ்லிம் விவகாரத்தை இறுதி நேரத்தில் வசமாகப் பயன்படுத்துகிறார் ஜனாதிபதி.

முஸ்லிம்கள் தமக்குள் ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தை உருவாக்கி, அபிவிருத்தி என்ற பெயரில் பேரினவாதத்திடம் அடிமைப்படும் நிலைமையை உதறித்தள்ளி, தனித்துவத்துடனும், சுயாதீனமாகச் செயற்படவும், சரியான சகோதர சக்திகளை அடையாளம் கண்டு அவற்றை அரவணைக்கவும் முன்வந்தால், இப்படிப் பந்துபோல களத்துக்குக் களம் மாறிமாறி அடிபடவேண்டிய பரிதாப நிலை ஏற்படாது. இறுதி நேரத்தில் இப்படி இழுபறிப்படும் நிலையும் வராது.

# தேர்தல் நடைமுறை மறுசீரமைப்பில் கவனம் செலுத்துகின்றதாம் அரசு

கொழும்பு,ஜூன்24

நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறையை மறுசீரமைப்பது குறித்து அரசு தீவிர கவனம் செலுத்திவருவதாகக் கூறப்படுகிறது. அரசியல் குழப்பங்களால் நாடாளுமன்றும் ஸ்திரமற்று இருப்பதை யடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஆரம்பம் முதல் வழக்கத்தில் இருநது வந்த தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ நடைமுறையையும், பின்னர் புதிய அரசமைப்பின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ நடைமுறையையும் ஒன்றிணைத்து இத்தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இப்புதிய திட்டத்தின்படி நாட்டில் மொத்தமாக 160 தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் பிரதிநிதிகளாக 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதேவேளை, இத்தேர்தல் வாக்களிப்பின் அடிப்படையில் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் 80 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர். அந்தவகையில், இப்புதிய திட்டத்தின்படி நாடாளுமன்றம் 240 பிரதிநிதிகளைக் கொண்டமையும்.

இதுதொடர்பாகத் தீர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பலசுற்றுப் பேச்சுகளின் முடிவில், அரசமைப்பில் இதற்கான திருத்தம் மேற்கொள்வதற்கான மசோதாவின் நகல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

தேர்தல் முறை மறுசீரமைப்புத் தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரும், அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் இரு பிரதான அரசியல் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அரசமைப்பு விடயங்களில் நிபுணத்துவம்மிக்க ஐ.தே.கட்சியைச் சேர்ந்த கே.டபிள்யூ. சொக்ஸி இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், இவ்விரு தேர்தல் நடைமுறைகளையும் ஒன்றிணைப்பதன் மூலம், பொதுமக்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்து உறுதிப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும் கிட்டுமெனத் தெரிவித்தார். அத்துடன், இவ்வித புதிய தேர்தல் முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு 1993ஆம் ஆண்டு முதல் ஆலோசிக்கப்பட்டு வந்ததாயினும், இத்திருத்தத்தை அறிமுகப்படுத்த இது உகந்த தருணம்தானா என்பது தமக்கு ஆச்சரியம் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

(அ-ஒ-205)

# சுற்றுச் சூழல் மாசடைவதற்கு திண்மக் கழிவே முக்கிய காரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்24

சுற்றாடல் மாசுபடுவதற்கு திண்மக் கழிவுகளே பெருமளவு காரணம் என பிரதேச சுற்றாடல் அதிகாரி ந.சூரியராஜா கூறினார்.

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:-

சுற்றுச் சூழலும் இயற்கை வள ஆதாரங்களும் இன்று மிகக்கடுமையான முறையில் அச்சுறுத்தலகளை எதிர்கொண்டுள்ளன. மேலும் பொருத்தமான முகாமைத்துவ முறைகள் இல்லாத காரணத்தால் திண்மக் கழிவு ஒரு வளர்ந்துகொண்டிருககும் பிரச்சினையாக இருக்கின்றது.

எனவே கழிவு தவிர்ப்பு, குறைப்பு, மள்பாவனை, இறுதிக் கழிவகற்றல் போனற திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை ஊக்கிவிப்பதற்கான கொள்கைகள் வகுக்கப்படவேண்டும்.

தேசிய மாகாண உள்ளூராட்சி அதிகாரசபை மட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான தேசிய உபாயத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதில் விழிப்பூட்டல் முக்கிய பங்கு வகிக்கின்றது. விழிப்புணர்வை உருவாக்குவதில் பாடசாலைகள், மாதர் சங்கங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள் என்பவற்றின் ஊடாகக் கல்வி விழிப்புணர்வை செயற்படுத்துவதன் மூலம் நாட்டில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும். தற்போதைய சந்ததியினரின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடும்போது எதிர்கால சந்ததியினரது தேவைகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் - என்றார் அவர்.

இக் கருத்தரங்கில் மாகாணசபைச் செயலாளர் திருமதி ம.வசந்தகுமார் சனசமூக நிலைய மேற்பார்வையாளர் து. சோமசுந்தரம், உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஐ.ஆனந்ததாண்டேஸ்வரர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-ரி)

# குடாநாட்டில் தொடர்ந்து சேவையாற்ற பிரிட்டிஷ் மருத்துவர்கள் விருப்பம்

குருநகர்,ஜூன்24

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றிவரும் வைத்திய நிபுணர்களாகச் சேவையாற்றும் டாக்டர் ஜசிக்கா, டாக்டர் ட்றிஸ்ரன் ஆகியோர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிவரை தமது சேவையை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்று யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவை அலுவலகத்தின் தாய்சேய் நலனுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி எஸ்.சொலமன் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் பிரிட்டனில் இருநது வந்து மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றி வருகிறார்கள். இவர்களது சேவையினால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தாய்சேய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் மேம்பட்டன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது இவர்களது சேவைக் காலம் முடிவடைந்துள்ளது என்றும் -

ஆனால், அவர்கள் இருவரும் தொடர்ந்து தமது சேவையை மக்களுக்கு வழங்க உள்ளார்கள் என்றும் - யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினர் தெரிவித்தனர். (ஒ-31)

# பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி மலையகத்தில் வேலை நிறுத்தம்

## ஜூன் 29இல் நடத்த ஏற்பாடு

கொழும்பு,ஜூன்24

ஆழிப்பேரலை மீள் நிர்மாணப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தக் கோரி எதிர்வரும 29ஆம் திகதி மலையகத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முனணி இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

மேற்படி கட்சியின் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமையவே இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாகக் கட்சியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனவாத எதிர்ப்புகளை மீறி ஆழிப் பேரலை நிவாரணப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி துணிச்சலுடன் முடிவெடுத்துள்ளார். இதற்கு மலையகத் தமிழ்மக்கள் முழுமையாக ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

இதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி 'தோட்டத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். அதேவேளை, ஏனையவர்கள் ஆதரவு தெரிவித்து பிரார்த்தனையில் ஈடுபடவும் அழைப்பு விடுக்கின்றோம்.

ஆழிப் பேரலையால் பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக இனவாத எதிர்ப்புகளை மீறி ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக முன்னிற்பதை எமதுகட்சி பாராட்டுகின்றது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடயத்தில் இந்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் - என்றுள்ளது.

கட்சியின் தலைவர் ரி.வி.சென்னன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். சதாசிவம், உப தலைவர் கணபதி கனகராஜ், உதவிச் செயலாளர்களான சிவசுந்தரம், மாதவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-202)

# முகாமைத்துவ கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஜூன்24

யாழ்.மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் சிறப்பு முகாமைத்துவ கற்கைநெறி நாளை ஆரம்பமாகவுள்ளது. இதன் தொடக்க நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 111/1 யாழ். பிரதான வீதியிலுள்ள கூட்டுறவு நுகர்ச்சி சமாச வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. இளம்பரிதியும் கலந்துகொள்வர்.(ஒ-222)

## உதயவாக்கு

பெருமை என்பது தன் நிலையில் தாழ்வு வராமல் பாதுகாத்துக் கொள்ளுதலே. -அக்பர்.

## நாளை

ஆனி 11
சனிக்கிழமை
25.06.2005
திதி : சதுர்த்தசி
பின்னிரவு 12.52 வரை
நட்சத்திரம் : திருவோணம்
பிற்பகல் 04.39 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 02.55- 04.25
ராகுகாலம்: 08.55 - 10.55
(யாவும் பழைய நேரப்படி)



உ

## திருவருள்மிகு பண்ணாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேக தின பிரதி வருஷ

## மணவாளக் கோல விஞ்ஞாபனம்

காலம்: **25-06-2005 சனிக்கிழமை**

நேரம்: **காலை 8 மணி**

*ஐங்கரன் அடியார்களே!*

மேற்படி ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகம் (1009) தொடர்பான கிரியைகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும். சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து பெருமானுக்கு விசேட பூசை இடம்பெறும்.

மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று, பெருமான் உள் வீதி எழுந்தருளி மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய பூந்தண்டிகையில் வெளிவீதி வலம்வந்து அருள்பாலிப்பார்.

சங்காபிஷேக உபயம்: **நமசிவாயம் கனகராயர் குடும்பம்**
**அருணாசலம் சண்முகநாதன் குடும்பம்**

அன்னதான உபயம்: **பேராசிரியர் சுந்தரலிங்கம் சிவபூரணம் குடும்பம்- அமெரிக்கா**

*குறிப்பு:* நண்பகல் 12 மணியளவில் மகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும்.

*அடியார்கள் வருக! ஐங்கரன் அருள் பெறுக!*

இறைதிருத்தொண்டில்
**இ.சபாரத்தினக் குருக்கள்,**
**ம.மகேந்திரசர்மா**
ஆதீனகர்த்தாக்கள்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(36849)(26-21-11-15)


## வேலைக்கு ஆள்கள் தேவை

*வவுனியாவில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது விருந்தினர் விடுதிக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.*

- சமையலாள்
- காசாளர்
- சப்ளையர்ஸ்
- எழுதுநர்
- கணக்காளர்
- மனேஜர்
- உதவியாளர்

**ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

வேலையில் சேர விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் (25.06.2005க்கு முன்) உடனே தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**சுவர்க்கா ஹோட்டல்**

**☎ 0777 563991**

(36870) (21-11-15)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் வலிகாமம் வலய (திட்டமிடல்) பிரதிக்கல்விப்பணிப்பாளருமாகிய



**திரு.கா.சந்திரபாலன்**
அவர்களின் அன்புத் துணைவியார்
திருமதி
**இராஜேஸ்வரி சந்திரபாலன்**

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை.
(சி/43600)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## 18 ஆம் வருட அன்பின் நினைவு

அன்னை மடியில் 1920 - 07 - 15



ஆண்டவன் அடியில் 1987 - 07 - 12

**அமரர் செ.திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர்)

**திதி: 2005.06.24**

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் பதினெட்டுச் சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாசவிளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

உங்கள்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*
(36769)

# கிணற்றில் இருந்து சைக்கிள் மீட்பு

சாவகச்சேரி,ஜூன்24

மட்டுவில் கிழக்குப் பகுதி கல்வாரையில் உள்ள நல்ல தண்ணீர் கிணற்றுள் இருந்து சைக்கிள் ஒன்றைச் சாவகச்சேரி பொலீஸார் மீட்டனர்.

நல்ல தண்ணீ அள்ளச் சென்றவர்கள் கிணற்றில் சைக்கிள் இருப்பதைக் கண்டு சாவகச்சேரிப் பொலீஸாருக்குக் கொடுத்த தகவலை அடுத்தே இந்தச் சைக்கிள் மீட்கப்பட்டது.

அப்பகுதி இளைஞர்கள் பொலீஸார் முன்னிலையில் கிணற்றுள் இறங்கிச் சைக்கிளை மீட்டுக் கொடுத்தனர். இது தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலீஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (3-31)

# பதிவுகாலம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்24

கடந்த போர்க்காலச் சூழலின் போது காணாமற் போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவுசெய்யும் பணி மேலும் 3 வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில காணாமற் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் பணியின் காலக்கெடு ஏற்கனவே முடிவடைந்திருந்தது.

இதனைத் திருத்தியமைப்பதற்கான சட்ட மூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டது. இதனையடுத்தே இந்தப் பணி மேலும் 3 வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை - ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகக் காணாமற்போனவர்களுக்கான இறப்புப் பதிவுகளைக் காலகெடு இன்றி பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளும் அச்சட்ட மூலத்தில உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் -என்று அவர் மேலும் தெரிவித்தார். (3-203-204)

# திருஇருதய சபையின் ஆண்டு விழா

குருநகர்,ஜூன்24

குருநகர் புனித யாகப்பர் ஆலய திரு இருதய சபையின் நூற்றாண்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. அன்று காலை 5.45 மணிக்குத் திருநாள் திருப்பலி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும். அன்று மாலை 4.30 மணிக்கு நூற்றாண்டு மலர் வெளியீட்டு வைபவம் வண.பிதா றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். நூலுக்கான மதிப்புரையை யாழ்.கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜா நிகழ்த்துவார்.

அன்று மாலை 6 மணிக்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறவுள்ள பொது விழாவில் யாழ்.ஆயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூற்றாண்டு விழாப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோர்க்கான பரிசில்களை அவர் வழங்குவார். (ஒ-51)


## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப்பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார்.

ஒருமுறை சந்தியுங்கள்

தொடர்பு: SHANJAEYA REST HOUSE,
NO.5, RACCA ROAD, JAFFNA. T.P.077 9173940

(36862)(39-11-15)


உ
சிவமயம்

## வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி தேவஸ்தானம்

*முக்கிய குறிப்பு:* **சகல வசதிகளுடன் கூடிய கல்வீடு தங்கியிருந்து பூசை செய்வதற்குத் தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு: **நிர்வாகசபை**
**இ.நடேசபிள்ளை (செயலாளர்),**
**முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

(36823) (21-11-15)


**DeWALT®**
**High Performance Industrial Tools**
**BLACK&DECKER®**

## மின் சக்திக் கருவிகள் ஏராளம்

தச்சு வேலைக்கு, இரும்பு வேலை
மற்றும் வீடமைப்பு வேலைகளுக்கும்




டெல்மேஜிடம் இருந்து
பிளெக் அன்ட் டெக்கர் மற்றும் டிவோல்ட்

இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள விற்பனை முகவர்களிடமும்

டெல்மேஜ் காட்சியறை களிலும்

விபரங்களுக்கு அழையுங்கள் : 2665913, 4717319

Delgraphics


## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் தம்பிராசா (ஆச்சாரியார்)



காளிகோயிலடி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் தம்பிராசா அவர்கள் 21.06.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நந்தகுமார், நந்தினி, ஜெயந்தகுமார், வசந்தகுமார், அஜந்தினி, தர்சினி, ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரமேஸ்வரி, தவராசா, ஆனந்தராசா கௌசலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*வட்டு.தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(36886) (21-11-15)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

**சோதிட சாஸ்திரத்தின்படி சனி, ராகு கேது, குரு ஆகிய கிரகங்கள்தான் ஒரு ராசியில் அதிக நாள்கள் இருக்கின்றன. எனவேதான் இந்தக் கிரகங்களின் பெயர்ச்சி மட்டும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.**

**இன்று வெள்ளிக்கிழமை 24 ஆம் திகதி, சனிப் பெயர்ச்சி நிகழ்கிறது. சனீஸ்வரன் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு இடம் மாறுகிறார்.**

**(20.06.2005 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் இரண்டு ராசிகளுக்கான பலன்கள் உதயனில் வெளியாகி வருகின்றன)**

## கும்பம்

பஞ்சமத்திலிருந்து 6ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாகும் சனிபகவான், உங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளை நீக்குவார். குடும்பத்தில் திருமண நிகழ்ச்சிகள் உட்பட அனைத்து சுபகாரியங்களும் நடக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் தொல்லைகள் நீங்கும். எதிரிகள் அடங்குவார்கள். உங்கள் மனதில் ஒரு உற்சாகம் தென்படும். முயற்சிகள் அனைத்தும் வெற்றியடையும். உங்களை எதிர்த்துப் போட்ட வழக்குகள் அனைத்தும் தவிடுபொடியாகிவிடும். கணவன் - மனைவி உறவு நிலை சிறப்பாகவே இருக்கும். பிள்ளைகள், பேரன் பேர்த்திகள் போன்ற சுப விருத்திகள் குடும்பத்தில் உண்டாகும். வீடு, மனை போன்றவை வாங்கும் யோகம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். மேலதிகாரிகள் உங்களை நோக்கி ஆதரவுக் கரம் நீட்டுவார்கள். பதவி உயர்வுடன், இரண்டு மடங்கு ஊதிய உயர்வும் சிலருக்குக் கிடைக்கும். கொடுத்த பணிகளைக் குறித்த காலத்தில் செய்து முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் நன்றாக இருக்கும். இந்த இரண்டரை ஆண்டுகளில் உங்கள் முதலீடுகளைப் பெருக்கி வியாபாரத்தை விருத்திசெய்யுங்கள். உங்கள் நண்பர்கள் உங்களைக் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவையும் எடுக்க மாட்டார்கள் என்ற நிலை உருவாகும். உங்களின் வியாபாரத்திற்குப் புதிய கிளைகளை முக்கியமான இடங்களில் ஏற்படுத்தலாம். உங்களிடம் பணியாற்றும் ஊழியர்கள் நல்ல விசுவாசத்துடன் ஒத்துழைப்பாக இருப்பார்கள். மறைமுக எதிரிகள் யாரும் இல்லாததால் உங்களின் வியாபாரம் உயரும்.

விவசாயிகளுக்கு விளைச்சல் அமோகமாக இருக்கும். விளைச்சல் பெருகும். வருவாய் கூடும். குத்தகைக்காரர்கள் உங்களைத் தேடி வந்து பழைய கடன்களைக் கொடுத்துவிட்டுச் செல்வார்கள். தாங்கள் புதிய நிலங்களை வாங்கும் நேரமிது. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக்கொள்ளலாம். அதன் மூலம் அதிக விளைச்சல் காண முயற்சிக்கலாம். கால்நடைகளின் மூலம் லாபம் அதிகரிக்கும் என்பதால் புதிய கால்நடைகளை வாங்கிப் பயனடையலாம்.

அரசியல்வாதிகளுக்கு இந்த இரண்டரை ஆண்டுகளில் மிகவும் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தங்களின் சொல்லுக்கு எதிர்க்கட்சியினரும் மயங்கி அடிமையாவார்கள். எதைச் செய்தாலும் முடிவு வெற்றிகரமாக அமையும். மேலிடத்தின் நேரடிப் பார்வை உங்கள் மேல் விழுவதால் அமைச்சர் பதவி போன்ற முக்கிய பொறுப்புகள் கிடைக்கும். சிறிது காலம் ஓய்வு கிடைக்காதா என்று எண்ணும் அளவிற்கு ஓய்வு, ஒழிச்சல் இன்றி உழைப்பீர்கள்.

கலைத்துறையினரின் பெயரும், புகழும் கொடிகட்டிப் பறக்கும். உங்களின் திறமை அனைவரையும் அசத்தும். புதிய ஒப்பந்தங்கள் உங்களை நாடிவரும்.

பெண்மணிகளின் அந்தஸ்து உயரும். கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். வீடு, வாகனம் போன்றவற்றை வாங்கும் யோகமும் உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் பெண்மணிகளுக்கு சக பெண் ஊழியர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும்.

மாணவமணிகள் படிப்பில் வெற்றி அடைவீர்கள். திடீரென்று நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். ஆசிரியர்கள் உங்களைப் புகழ்வார்கள். விரும்பிய பாடப்பிரிவுகளில் சேர்வீர்கள்.

பரிகாரம்: ஒவ்வொரு சங்கடஹர சதுர்த்தி அன்று விநாயகரையும், வியாழக்கிழமை அன்று தட்சிணாமூர்த்தியையும் வழிபடவும். சனிக்கிழமை அன்று சனீஸ்வரரையும், ஆஞ்ச நேயரையும் வணங்கி நல்ல பலன்களைப் பெருக்கிக் கொள்ளவும்.

## மீனம்

உங்கள் ராசியில் ஏற்பட்ட கண்ட சனி விலகி, 5ஆம் இடமான பூர்வ புண்ய ஸ்தானத்திற்கு சனி பகவான் பெயர்ச்சியாகின்றார். எனவே இந்த சனிப் பெயர்ச்சி, உங்களுக்கு நல்ல சாதகமான பலன்களையே கொடுக்கும். எதிர்பாராத வகையில் தன சேர்க்கை ஏற்பட்டு சேமிப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் உடல் நிலை சம்பந்தமாக இருந்துவந்த மருத்துவச் செலவுகள் குறைய ஆரம்பிக்கும். அடிக்கடி பழுது ஏற்பட்டு தொல்லை பல கொடுத்து வந்த வாகனங்கள், இனிமேல் நன்றாக ஓட ஆரம்பிக்கும். வீடு, நிலம் போன்றவற்றில் இருந்து வந்த விரயங்கள் குறைந்து லாபம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டாகும். உங்களின் பலம் கூடியதால் எதிரிகளின் தொல்லை குறையும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். புத்திரர்கள் வழியில் சந்தோஷம் ஏற்பட்டு சுபச்செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் முன்னேற்றம் தென்படும்.

உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகளில் கவனத்துடன் செயல்படவும். உங்களுக்கு மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். என்றாலும் சில நேரங்களில் நீங்கள் பேசும் வார்த்தைகளால் முன்னேற்றம் அடைவதில் கால தாமதம் ஏற்படும். எனவே, பேச்சில் எச்சரிக்கை தேவை. அதேநேரம் சிலருக்கு விரும்பியபடி இடமாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவார்கள். அவர்களின் ஆதரவைப் பெற்று பெரும்பாலான காரியங்களைச் சாதித்துக் கொள்ளுங்கள். பண வசதி தாராளமாக இருப்பதால் வருங்காலத்திற்கான சேமிப்புகளில் கவனம் செலுத்தலாம்.

வியாபாரிகளுக்கு இது லாபகரமான பெயர்ச்சி. வியாபாரம் நன்றாகவே நடக்கும். மற்றப்படி உங்கள் முயற்சிகளில் உறுதியாக இருந்தால் எதிர்பார்த்த பலனை அடையலாம். உங்கள் பொருள்களை நன்றாக விளம்பரப் படுத்துங்கள். புதிய சந்தைகளில் அவற்றை விற்பதற்கு இடங்களைத் தேடுங்கள். தன்னம்பிக்கையுடன் செயற்படுங்கள். சிலர் இடமாற்றங்களைச் சந்திக்க நேரும். தொழில் ரீதியாக ஏற்பட்டிருக்கும் போட்டியினை திறமையாகச் சமாளிக்கும் ஆற்றல் கூடிவரும். பூர்வீக வியாபாரம் செய்து வருபவர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். அதில் மேலும் முதலீடுகளைச் செய்து அதிக முன்னேற்றம் அடையலாம்.

விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாகவே இருக்கும். போட்டது முளைக்கும்; அறுவடையில் கேட்டது கிடைக்கும்! பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்த சனி பகவான் லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் இத்தகைய முன்னேற்றத்தைக் கொடுப்பார். அதே நேரம் எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வீணாக வரப்பு, வாய்க்கால் சண்டைகளில் இறங்க வேண்டாம். மற்றப்படி கால்நடைகளாலும் உங்களுக்கு லாபம் கிடைக்கும். புதிய நிலங்களை வாங்கி விவசாயத்தை விரிவுபடுத்துவீர்கள். அதேசமயம் சில நேரங்களில் சரியான முடிவு எடுப்பதில் தடுமாறுவீர்கள். இந்த நேரங்களில் அனுபவவாதிகளின் ஆலோசனையைப் பெற்று நடக்கவும். சற்று விரயங்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளதால் வீண் செலவுகளைக் குறைத்து சிக்கனத்தைக் கடைபிடிக்கவும்.

அரசியல்வர்திகளுக்கு இது சாதகமான கால கட்டம். குடத்திற்குள் இட்ட விளக்காக உங்களை 'கண்ட சனி' இது நாள் வரை வைத்திருந்தார். தற்போது அது விலகிவிட்டதால் இனி உங்களின் புகழ் வெளிப்படும். நீங்கள் மேடையில் பேசினால் உங்கள் பேச்சை ரசிப்பதற்கு பெரும் கூட்டம் கூடும். பழைய கஷ்டங்களை எல்லாம் மறந்துவிட்டு சந்தோச நடைபோடலாம். தங்களுக்கு உயர்ந்த பதவி காத்துக் கொண்டிருக்கிறது. அதேநேரம் தொண்டர்களை அலட்சியப்படுத்தாமல் ஆதரித்து அரவணைத்துச் செல்லுங்கள். நீங்கள் கண்ட சனியில் இருந்தபோது அவர்கள் தானே தொடர்ந்து ஆதரவு தந்து உங்களை அரணாக நின்று காப்பாற்றினார்கள்?

கலைத்துறையினருக்கு இது சிறப்பு தரும் பெயர்ச்சி. எதிர்பார்த்த பாராட்டுகள் உங்களைத் தேடிவரும். அதேசமயம், நீங்கள் அதனால் நிதானம் இழக்காமல் தொடர்ந்து செயலாற்றுங்கள். உங்களின் கடமைகளைச் சரியாகச் செய்யுங்கள். குறிப்பாக சின்னத்திரை நடிகர்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி காலம் வளமாகவே அமையும்.

பெண்மணிகள் செல்வச் செழிப்போடு வாழக்கூடிய நிலைமை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். குழந்தைகளால் சந்தோசம் அடைவீர்கள். வேலைபார்க்கும் பெண்களுக்கு முற்போக்கான பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த சம்பள உயர்வும் கிடைக்கும். சக தோழிகளின் ஆதரவு சிறப்பாக இருப்பதால் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு முடிவுகளை எடுக்கவும். சில நேரங்களில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். அத்தகைய சமயங்களில் மற்றவர்களின் அறிவுரை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

மாணவமணிகள் நல்ல மதிப்பெண்களை அள்ளுவார்கள். கல்வியிலிருந்த மந்தநிலை விலகி, படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். எந்தப் பாடத்தையும் ஒரு முறை படித்தவுடனேயே புரிந்து கொள்ளும் கற்பூர புத்தி உண்டாகும். விளையாட்டுத் துறையில் ஈடுபடும் மாணவர்கள், விருதினையும் பாராட்டினையும் பெறுவார்கள். எனினும் தொடர்ந்து வெற்றிபெற விடாமுயற்சியும் நம்பிக்கையும் உங்களுக்கு அவசியம்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சனீஸ்வரன் சந்நிதியில் எள் தீபம் ஏற்றி வழிபட்டு வரவும். ஊனமுற்றோருக்கு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவும். மேலும் சனிக்கிழமைகளில் வெங்கடேஸ்வரர் வழிபாடும் நல்ல பலனைக் கொடுக்கும். (முற்றும்)

(நன்றி: தினமணி)

---

# சர்வதேச கூட்டுறவு தினத்தை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

அரியாலை.ஜூன்24

சர்வதேசக் கூட்டுறவுத் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இதனையொட்டி எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை விசேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நிறுவனங்கள், சங்கக் கிளைகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்கள் போன்றவற்றில் கூட்டுறவுக் கொடியை ஜூலை முதலாம் திகதி முதல் 31ஆம திகதிவரை பறக்கவிடும்படி மாவட்ட கூட்டுறவுச் சபை கேட்டுள்ளது.

அத்துடன், சங்க உறுப்பினர்கள், நிர்வாக சபையினர், பொதுச்சபையினர் ஆகியோருக்குக் கருத்தரங்கு மற்றும் கலந்துரையாடல்களையும் பாடசாலை மாணவர்களுக்குக் கூட்டுறவு தொடர்பான கருத்தரங்குகளையும் -சங்க வளாகம் மற்றும் வைத்தியசாலைகள் போன்றவற்றில் சிரமதான நிகழ்வுகளையும் - ஏற்பாடுசெய்து நடத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு தொடர்பான விளக்கங்களை துண்டுப்பிரசுரம் மூலம் மக்களுக்கு விநியோகிக்க ஆவன செய்யும்படியும் கூறப்பட்டுள்ளது.

இவற்றை நடைமுறைப்படுத்தும்படி மாவட்டக் கூட்டுறவுச்சபை கூட்டுறவு நிறுவனங்களைக் கேட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வேலைத் திட்டங்களைப் பின்பற்றி இந்தச் சர்வதேச கூட்டுறவுத் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஒத்துழைக்குமாறு சபை மேலும் கேட்டுள்ளது. (ஒ-17)



நீண்ட காலமாகக் குனறும் குழியுமாகக் காணப்பட்ட நீர்வேலி தெற்கு விவசாய வீதி தற்போது கிரவல்மக்கிகொண்டு புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வீதியின் தற்போதைய தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

(படம்: அரியாலைச் செய்தியாளர்)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை ஜூன் 26 இல்

காரைதீவு,ஜூன்24

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம், பட்டிருப்பு மகா வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 15 பாடநெறிகளுக்கான ஆசிரியர் ஆலோசகர்கள் இப்போட்டிப் பரீட்சையினூடாகவும் பின்பு நடைபெறும் நேர்முகப்பரீட்சையினூடாகவும் தேர்ந்தெடுக்கப்படுவரென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை தரம்1, வகுப்பு தரம் 2 I ஆகிய தரங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனறும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-84)

# தொண்டராசிரியர் நேர்முகப்பரீட்சை நடத்த கல்வியமைச்சு இணக்கம்

இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண தொண்டராசிரியர் நேர்மு ப் பரீட்சையை மீண்டும் நடத்த கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடிமெல்லைக் கடந்த புதன்கிழமை சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்படி இணக்கம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கே இந்நேர்முகப்பரீட்சை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. இதில் முக்கிய நிபந்தனையாகவிருந்த பல்கலைக்கழகத் தெரிவுக்கு ஆம்/இல்லை என்ற நியதி விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று கல்வியமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

எஞ்சிய தொண்டராசிரியர்களுக்கு பரீட்சை மூலம் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ஒ-84)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வி.பொன்னுத்துரை

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் *வி.பொன்னுத்துரை* அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(36871)(32-14-15-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 18 03 1955
உதிர்வு 26 05 2005

### அமரர் சுப்பிரமணியம் இராஜேந்திரா

26.05.2005 அன்று இறைபதமெய்திய சுப்பிரமணியம் இராஜேந்திரா அவர்கள் திருச்சிற்றம்பலம் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற விலைக்கட்டுப் பாட்டதிகாரி)-காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மகனும் பாலாம்பிகை (உசா மெடிகிளினிக், கொழும்பு) அவர்களின் அன்புக் கணவரும் சுசிலாவின் பாசமிகு சகோதரரும் வை.இராசலிங்கம் (ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி) அவர்களின் மைத்துனரும் நிசாந்தன் (சுவிஸ்), பானுஷா, சங்கீதா, கோபி கிருஸ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தமயந்தி, லக்ஷ்மன், அரவிந்தன், கல்யாணி ஆகியோரின் மாமனும் ராஜ்குமார், நளினா, ஆராஅமுதன் ஆகியோரின் சித்தப்பாவும் துளசி, அர்ஜுனின் ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது நேரடியாகவும் தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபந்தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கன்றோம்.

நாளை (25-06-2005) சனிக்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி வடலி. அ.மி.பாடசாலை வீதி.
வல்வெட்டித்துறை. (36804)(50-14-15-26)
- குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் ஐந்தாண்டு



தாயக மண்ணுக்கு 16 11 1936
தாயக மண் விட்டகன்று 20 06 2000

### அமரர் கந்தையா சண்முகரட்ணம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், யாழ்.தொழில் திணைக்களம்)

திதி: திருதியை 24-06-2005

அன்புக்கு இலக்கணமே! தெய்வத்தின் நிழல் உருவே!
அயலவரின் அன்பிற்குரிய "சண்முகம் அண்ணையே!'
ஆசையோடு அருகிருந்த காலங்கள் மாறி
ஆனி திருதியை நாளொடு அகலுது ஐந்தாண்டு!
ஆண்டுகள் ஐந்து ஆனபோதும்
ஆறவில்லை எங்கள் மனம்!
காலங்கள் தான் கரைந்தோடினாலும்
கவலை தான் தீர்ந்திடுமோ?
நாம் தலைநிமிர்ந்து நடக்க
நல்வழி காட்டிய தெய்வமே!
நாம் தலைநிமிர்ந்து நடக்கையிலே
நம்மைவிட்டு அகன்றது ஏனோ?
காலமெல்லாம் உங்கள் நினைவில்
காத்திருப்போம் ஈரவிழிகளுடன்....!

நீங்காத நினைவுகளைச் சுமந்து:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இல.29. விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை. (36837)(50-14-15-26)

## ஞானச்சுடர் வெளியீடு

தொல்புரம்,ஜூன்24

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வும் மாதாந்த ஆதமீக சஞ்சிகையான 'ஆனி மாத ஞானச்சுடர் மலர்' வெளியீட்டு விழா வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆச்சிரம இயக்குநர் அமுதகலாயோகி செ.மோகனதாஸ் சுவாமிகளின் விசேடபூஜை, தீப ஆராதனைகள், வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெறும்.

காலை 10.30 மணிக்கு இந்த நிகழ்ச்சி, பேரவையின் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் ஆரம்பமாகிப் பேரவையின் உப பொருளாளரும், இளைப்பாறிய தபால் அதிபருமான செல்லையா நடராசாவின் மங்கள விளக்கேற்றல் மற்றும் தேவார பாராயணத்துடன் நடைபெறும்.

இந்த நூலின் வெளியீட்டுரையை யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானப் பிரதம குரு பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்களும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியா சைவத்திரு. க.நவரெத்தினமும் முறையே நிகழ்த்துவர். (3-119)

## விழிப்புணர்வுக்குழு அமைப்பு

குருநகர், ஜூன்24

யாழ்.சுண்டுக்குளிப் பகுதியில் இடம்பெற்று வரும் களவு மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை ஒழிக்கும் நோக்குடன் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தினர் மற்றும் ஜே 75 கிராம உத்தியோகத்தர் ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க இவ்விழிப்புக்குழு அமைக்கும் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தை மற்றும் இப்பகுதி மக்களும் பெருமளவில் கலந்து கொண்டு இவ்விழிப்புக்குழுவை அமைத்துள்ளனர் என யாழ்.கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் தலைவர் வி.ஜீவராசா தெரிவித்தார். (3-51)

## சடலம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்24

கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நாரந்தனை மத்தியைச் சேர்ந்த அலோசியஸ்•மரியபிள்ளை (வயது 82) என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-78-15)

## மாநகரப் பகுதியில் நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்24

இலங்கை மின்சார சபையின் யாழ் பிரதேச அலுவலகத்தினரால் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நாளை சனிக்கிழமை கீழ்க்குறிப்பிடப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

உரும்பிராய், கோண்டாவில் பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3-204)

## முத்தமிழ் விழா

யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா நாளை சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு ஜெறோம் மண்டபத்தில் அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தை அருட்திரு.ம.கான்ஸ்போவர் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை யாழ்.அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு.ம.பயஸ் அடிகளார் வழங்குவார். பேச்சு, அபிநயப்பாடல், கோலாட்டம், மீனவநடனம், நாடகம், குழு இசை பாடல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (3-51)

## குடும்ப விவரம் சேகரிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் நிவாரணம் நிறுத்தப்பட்டவர்களில் மிகவும் கஷ்ட நிலையில் உள்ள குடும்பங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.செயலகம் கோரியுள்ளது.

வறுமையிலும் வறுமையான குடும்பங்கள், குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்கள், போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றின் விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 25ஆயிரம் பெறப்பட்டு 15மாதங்கள் பூர்த்தியடைந்ததால் நிவாரணம் நிறுத்தப்பட்ட குடும்பங்களில் மிகவும் கஷ்டநிலையில் உள்ள குடும்பங்களின் விவரங்களே கேரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(24-14-15-26)

நெல்லியடி சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்காக 26-06-2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சோனப்பு மைதானத்தில் நடைபெறும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிக்கு அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி-43596)

நெல்லியடி, கரவெட்டி. நெல்லியடி ச.ச. நிலையம்.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

*சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்துவதற்கான*

### கேள்வி கோரல் - 2005 / 2006

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் அபிவிருத்திக் குழுவின் சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பன 01.07.2005 இல் இருந்து 30-06-2006வரை (ஒரு வருட காலம்) நடத்துவதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன. எதிர்வரும் 27-06-2005ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை கேள்விகள் ஏற்கப்பட்டு அன்றையதினம் முற்பகல் 11 மணியளவில் கேள்விகள் திறக்கப்படும்.

சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கான கேள்விப்படிவங்களும் நிபந்தனைகளும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்படிவத்தினைப் பெற மீளளிக்கப்படாத ரூபா 200/- இனைச் செலுத்துதல் வேண்டும்.

டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை (தலைவர்).
திரு. வீ.ஜீ.தங்கவேல் (செயலாளர்).
(சி-43601) (24-14-15-26)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழு.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்
திருமதி றெஜினா மத்தியூஸ் அவர்களின் அன்புத் தாயார்

### எலிசம்பிள்ளை மனோன்மணி

அவர்கள் காலமானார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி/43603)(32-14-15-26)

## மரண அறிவித்தல்கள்

### வினாசித்தம்பி பொன்னுத்துரை

(B.A., S.L.P.S. I. - முன்னாள் அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி)



சரவணையைப் பிறப்பிடமாகவும் இல.10, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி பொன்னுத்துரை அவர்கள் கடந்த 21.06.2005 செவ்வாய்ககிழமை காலை யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரசித்த நொத்தாரிஸ் சரவணை வினாசித்தம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வனும் நெடுந்தீவு அப்புத்துரை - கண்மணி தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மீரா (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், கிளிநொச்சி), சுபிதா (வவா - கனடா), சித்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திஸநாயகம்பிள்ளை (ஆசிரிய ஆலோசகர், தீவகவலயம்), பரமதாசன் (கனடா), சிவா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியர்), காசிப்பிள்ளை, காலஞ்சென்ற பாலசிங்கம், நடராசா (கணக்காளர் - கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் (அரச கருமமொழித் திணைக்களம்), புனிதமணி, புலவர் அரியநாயகம், காலஞ்சென்ற சத்தியபாலன் மற்றும் பூரணம், பவா, இந்திரா, ஞானப்பிரகாசம், பராசக்தி, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் கிருஸ்ணி, பவித்திரா, புருசோத்தமன், தர்மிகா, சரணியா, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-06-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.* (36875)(26-14-15)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள் சு.திசைநாயகம்பிள்ளை.

### திருமதி ஆறுமுகம் சரஸ்வதி

காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் இல.35/1, வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் சரஸ்வதி அவர்கள் நேற்றுமுன்தினம் (22.06.2005) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி (விசுவப்பா) சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற அரச ஒப்பந்தகாரர் கதிரவேலு ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் கனகரட்ணம் (ஐங்கரன் ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு), குணசிங்கம், மங்களகுமாரி, காலஞ்சென்ற இரத்தினகுமாரி, பரமேஸ்வரன் (அம்பாள் களஞ்சியம், வழக்கம்பரை, சுழிபுரம்), நகுலேஸ்வரி (ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பவதி (பற்சிகிச்சையாளர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), ரஞ்சி (இந்தியா), கணேசமூர்த்தி, சிவசுப்பிரமணியம் (ஊழியர், ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம், சாவகச்சேரி), நாகேஸ்வரி (கால்நடை வைத்தியர்), சற்குணநாதன் ஆகியோரின் மாமியும் துர்க்கா, ராம்சீலிகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), சிந்துஜா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), பிரீந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தையா, வைத்திலிங்கம், காலஞ்சென்ற நேசரத்தினம், தியாகராசா, பூமணி, வாலாம்பிகை, சௌந்தராம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசையா, நடராசா, இராசம்மா, காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.35/1, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (36888)(26-14-15)
தகவல்: பிள்ளைகள்.

# யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்: அனுசரணையாளருக்கு விளக்கியுள்ளோம்

## செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்ச்செல்வன்

**கிளிநொச்சியில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனைச் சந்தித்த பின் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வழங்கிய செவ்வியின் ஒருபகுதி நேற்றைய உதயனில் செய்தியாக வெளியானது.**

**செவ்வியின் எஞ்சிய பகுதியை இங்கு தருகின்றோம்.**

### பொதுக்கட்டமைப்பு சுதந்திரமானதாக இருக்கும்

❒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் குறித்துப் பத்திரிகைகளில் தகவல்கள் வெளியாகின. அது சம்பந்தமாக அரசிடம் இருந்து உத்தியோகபூர்வமாக அறிவிப்புகள் வந்ததா?

❖ *பதில்:-* நிச்சயமாக இல்லை. அந்தத் தகவலகள் எமது மக்களின் மத்தியில் அதிருப்தியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன என்பதையும் இன்று அனுசரணையாளர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு ஜனாதிபதிக்கோ, நாடாளுமன்றத்துக்கோ பதில் சொல்வதாக இருககப்போவதில்லை. அது முழுக்க முழுக்க ஒரு சுதந்திரமான கட்டமைப்பாகவும் நிதியைக் கையாள்வது பாதுகாப்புக்கான நிதி நிறுவனத்திடம் இருக்கும் என்பதும் ஏற்கனவே நாங்கள் வலியுறுத்திய விடயங்கள். அந்தக் கட்டமைப்பில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அண்மைக்காலத்தில் இது சம்பந்தமாகச் செய்த விமர்சனம், உரை என்பன மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன என இன்று சுட்டிக்காட்டியுள்ளோம்.

இது தொடர்பாக எமது கவலையையும் கரிசனையையும் நோர்வேத் தரப்பிடம் உறுதியாகத் தெரிவித்துள்ளோம்.

❒ *கேள்வி:-* கடைசியாக நோர்வேத் தரப்பு, புலிகளிடம் வரைவு ஒன்றை வழங்கியிருந்தது. அதைப் புலிகள் ஏற்றிருந்தனர். அதன்பின் அந்த உள்ளடக்கம் ஜனாதிபதியால் மாற்றப்பட்டுள்ளது எனக் கருதுகிறீர்களா?

❖ *பதில்:-* அதுபற்றி நோர்வேத் தரப்பு எம்முடன் எதுவும் பேசவில்லை. ஆனால், ஜனாதிபதியின் உரை பற்றிய செய்திகளில்தான் அப்படி வந்து கொண்டிருக்கிறதே தவிர, அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வே அத்தகைய மாற்றம் எதையும் எங்கள்முன் முன்வைக்கவில்லை.

இது பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அவர்கள் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

பொதுக்கட்டமைப்புக்கு அப்பால் களநிலைவரங்கள் மிக நெருக்கடியடைந்து கொண்டு போகின்றன என்பதை இன்று அவர்களுக்குச்



சுட்டிக்காட்டியுள்ளோம்.

யுத்தநிறுத்தச் சூழல் நெருக்கடிக்குள்ளாகிக்கொண்டு போகிறது. இராணுவ நெருக்குவாரங்கள், பொருளாதாரத்தடை, மக்கள் மீதான இராணுவ நெருக்கடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இராணுவ ஆக்கிரமிப்புக் கூடிக்கொண்டு போகின்ற சூழ்நிலையில், தொடர்ந்தும் இந்தச் சமாதான முன்னெடுப்புக்களையோ, யுத்தநிறுத்தச் சூழலையோ பேணிச் செல்வது என்பது சாத்தியமில்லாத சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எமது மக்கள் விரக்தியடைந்து கொண்டிருக்கின்றார்கள்; கொந்தளித்துக்கொண்டிருக்கின்றார்கள்; போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

இதை மிக இறுக்கமாக நோர்வேக்கு விளக்கியுள்ளோம். எங்களது மண்ணில், எங்கள் தேசத்தில், எமது மக்கள் மீது இராணுவ ஆக்கிரமிப்பையும், இராணுவ நெருக்குவாரத்தையும், இராணுவத் திணிப்புகளையும் இறுக்கிக் கொண்டு சமாதானத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

இந்த நெருக்குவாரங்களில் இருந்து மீள்வதற்கான வழிகளைச் சிந்திப்பவர்களான, அது குறித்து முடிவு எடுக்கவேண்டியவர்களான ஒரு நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனா; நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். அந்த முடிவை எமது மக்கள் எடுக்கும் சூழல் ஒன்று உருவாகி வருகின்றது என்பதை நோர்வேத் தரப்புக்குத் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம்.

### நமது ஆலோசனை

❒ *கேள்வி:-* இந்த நெருக்கடி நிலையைத் தவிர்க்க ஏதாவது ஆலோசனைகள் சமர்ப்பித்தீர்களா?

❖ *பதில்:-* யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல, மக்கள் குடியிருப்புக்கள், வாழ்விடங்கள் ஆகியவற்றிலிருந்து இராணுவம் விலகி மக்கள் மீள்குடியமர்வை மேற்கொண்டு இயல்புநிலை ஏற்படுத்தப்படவேண்டும். இராணுவ நெருக்குவாரங்கள் முற்றாக அகற்றப்படவேண்டும் - இந்த ஆலோசனைகளைக் கூறினோம்.

இராணுவ நெருக்குவாரங்களைத் திணித்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களோ, அமைதி முயற்சிகளோ எவையும் சாத்தியமில்லை என்று தெளிவாகச் சுட்டிக்காட்டினோம்.

❒ *கேள்வி:-* இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகள் தாக்கப்படுவது, அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளனவே. இது தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

❖ *பதில்:-* இதை இன்றும் மிக இறுக்கமாக வலியுறுத்தியுள்ளோம். இராணுவத்தரப்பு ஒரு நிழல் யுத்தத்தைத் திணித்திருக்கிறது. மக்கள் மீதும் எம்மீதும் அது திணிக்கப்பட்டுள்ளது.

எமது அரசியல் செயலகங்கள் மீதான தாக்குதல்கள், போராளிகளைக் கொலைசெய்தல், மக்கள் மீதான தாக்குதல்கள். இவை போன்றவை எல்லாம் யுத்தநிறுத்தத்தை முற்றாக ஸ்தம்பிக்க வைக்கும் நடவடிக்கைகளே என்று இன்று சுட்டிக்காட்டினோம். இவற்றுக்கு உடனடிப் பரிகாரம் தேடப்படாவிட்டால் - இப்பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படாவிட்டால் - நிலைமை மிக மோசமாகும் என்பதையும் எடுத்துவிளக்கியுள்ளோம்.

❒ *கேள்வி:-* ஜே.வி.பி. அரசுக்குள் இருப்பதால் குழப்பம் என்றீர்கள். இப்போது அவர்கள் வெளியே போய்விட்டார்கள். இந்த அரசில் நம்பிக்கை வைத்துள்ளீர்களா?

❖ *பதில்:-* ஜனாதிபதி இப்போது நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். அவர் கையில்தான் எல்லா முடிவுகளும் தங்கியிருக்கின்றன. ஜனாதிபதிக்கு இடையூறாக இருந்தது என அண்மைக காலத்தில் கூறப்பட்ட ஜே.வி.பி. அரசில் இருந்து விலகியிருக்கிறது.

ஜனாதிபதி தீர்க்கமான - உறுதியான - முடிவுகளை எடுத்து அடுத்தகட்ட நகர்வுகளைச் செயவது இனிப் பிரச்சினைக்குரிய விடயம் அல்லவே.

ஆனால், மீண்டும் பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுபோவதாகவும், அபிப்பிராயம் கேட்பதாகவும் கூறிக் காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயத்தைத் தான் ஜனாதிபதி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதையே எம்மால் உணரமுடிகின்றது.

### முஸ்லிம்களின் பிரதிநிதிகள் யார்?

❒ *கேள்வி:-* முஸ்லிம் தரப்பில் ஒருபக்கம் பேரியல் அஷ்ரப், மறுபக்கம் ரவூப் ஹக்கீம். நீங்கள் யாரில் நம்பிக்கை வைக்கிறீர்கள்?

❖ *பதில்:-* இதுபற்றி நாங்கள் சொல்வது பொருத்தமில்லை. முஸ்லிம் மக்களே சொல்ல வேண்டும். முஸ்லிம் மக்கள் தங்கள் பிரதிநிதிகள் யார் என்று சொல்வது அவர்களைப் பொறுத்தது. அதை விடுதலைப் புலிகள் சொல்வது பொருத்தமில்லை.

முஸ்லிம் மக்களிடம் தான் இதைக் கேட்க வேண்டும்.

❒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்பு இழுத்தடிப்புக்கு நீங்கள் காரணமா?

❖ பதில்:- கட்டமைப்பு இறுதி வரைவு செய்யப்பட்டுப் பல மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு தரப்பு என்ற வகையில் ஜனாதிபதியின் இணககப்பாடு இன்றி இது இழுபட்டுக்கொண்டிருக்கின்றது. இது எல்லோரும் அறிந்த உண்மை. இதுவே யதார்த்தமாகும்.

❒ *கேள்வி:-* பொதுக்கட்டமைப்புக்கு கையொப்பம் இடப்படவில்லையா?

❖ *பதில்:-* இதுவரை எந்த இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை.

❒ *கேள்வி:-* முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை நியமிப்பதற்கு யார் பக்க உறுப்பினரை நீங்கள் குறிப்பிடுவீர்கள்?

❖ *பதில்:-* நாங்கள் நியமிப்பதில்லை. முஸ்லிம் பிரதிநிதித்துவத்துடன் சம்பந்தப்பட்ட விடயத்துக்கு எமது இணக்கப்பாட்டையும், ஆதரவையும் தெரிவித்துள்ளோமே தவிர யாரை இணைத்துக் கொள்வது என்பதை முஸ்லிம் மக்கள் தான் முடிவுசெய்யவேண்டும். நாங்கள் பதில் சொல்வது சரியல்ல.

அரசோடு பல முஸ்லிம் அமைச்சர்கள் பங்கெடுத்து இருக்கிறார்கள். முஸ்லிம் பிரதிநிதிகள் பலர் அரசோடு பங்கெடுத்திருப்பதால், அவர்கள் நிச்சயமாக ஜனாதிபதியுடன் இணைந்து முடிவுகளை எடுப்பார்கள் என நம்புகிறேன் - என்றார்.

(எ-க-3)

# உரிமை மறுக்கப்பட்டால் பதவியைத் தூக்கி எறிவேன்

## அமைச்சர் அமீர் அலி எச்சரிக்கை

கொழும்பு,ஜூன்24

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது உரிய தரப்பினர் இந்த விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் தனது அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்து விடுவார் என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் அமீர் அலி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றையும் விடுத்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களே, இவ்வாறான நிலையில் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் உரிலமகள் மறுக்கப்பட்டால் அல்லது அது விடயமாக உரிய தரப்பினர் நழுவல போக்கினைக் கடைப்பிடித்தால் எனது அமைச்சுப் பதவியினைத் தூக்கியெறியவும் தயாராக வுள்ளேன்.

நாங்கள் எமது சமூகத்திற்காகவே நாடாளுமன்றப் பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் பெற்றிருக்கின்றோம். அமைச்சர் பதவி பறிபோகுமென அஞ்சி எமது சமூகத்தின் உரிமைகள் மறுக்கப்படும்போது நான் வாய்மூடி மௌனியாக இருப்பேன் என்றுயாரும் எண்ணக்கூடாது.

எமது சமூகத்திற்கு எவ்வித பயனுமில்லாமல் இப்பதவியை மாத்திரம் வைத்துக்கொண்டு ஒரு நிமிடமேனும் இருக்க நான் தயாரில்லை.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பேச்சுகளிலும் முஸ்லிம்களுக்குத் தனித தரப்பு வழங்கப்படும் என்று கூறி இழுத்தடித்தனர். ஆயினும், ஒரு சுற்றிலாவது இவ்வுரிமை முஸ்லிம்களுக்கு வழங்கப்படாமல் மறுக்கப்பட்டுவிட்டது. இது யாவரும் அறிந்த விடயம். ஐக்கிய தேசிய முன்னணி அரசு எமது சமூகத்தை ஏமாற்றியது போல இந்த அரசும் ஏமாற்ற இடமளிக்கமாட்டோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் மீதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமை மீதும் வடக்கு !- கிழக்கு முஸ்லிம்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டுமாயின், பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு உரிய பங்கினை அவர் வழங்கவேண்டும். அவ்வாறில்லாது எமது சமூகத்தின் உரிமையினை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு, அவர்கள் எமது உரிமைகளை வழங்குவார்கள் என நம்பியிருக்கவும் முடியாது.

எமது சமூகம் பல தரப்பினராலும் தொடர்ந்து ஏமாற்றப்படுவதனை இனியும் நாம் அனுமதிக்க முடியாது. எமது சமூகத் தலைமைகள் ஒற்றுமைப்பட்டு இப்பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சமூகத்தின் உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுப்பதற்கு முன்வரவேண்டும். இதில் நான் உயர்ந்தவர், அவர் தாழ்ந்தவர் என்று எண்ணிக் கொண்டு செயற்படுவோமாயின் அதுவே, எமது சமூகத்திற்கு நாம் செய்யும் மிகப்பெரிய துரோகமாக அமையும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் உறுதி; யார் யார் கையெழுத்திடுவார்கள் என்று கூறமுடியாது!

## கல்முனையில் ஹெல்கிஸன் தகவல்

கல்முனைக்குடி,ஜூன்24

பொதுகட்டமைப்பில் முஸ்லிம்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படும். எனினும் ஆவணத்தில் யார், யார் கையெழுத்திடுவார்கள் என்பது குறித்து என்னால் எதுவும் கூற முடியாது.

- இவ்வாறு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து கல்முனைநகருக்கு விஜயம் செய்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கையிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் -

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் சீபிறிச் ஹோட்டலில் சந்திப்பொன்றை நடத்தினர்.

அச்சந்திப்பில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம். ஹனிபா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது சம்மேளனத்தின் ச பில் டாக்டர் எஸ்.நஜ்முத்தீன், சிரேஷ்ட சட்டத்தரணி யூ.எம். நிஸார், முன்னாள் விரிவுரையாளர் ஏ.ஆர்.ஏ. அஸீஸ், எம்.ஐ.அகமது லெப்பை, யூ.சம்சுதீன், ஐ.எம்.இப்றாகீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இலங்கையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களே, ஆழிப்பேரலை அழிவு மீள்கட்டுமானப் பணிகளுக்காக அமைக்கப்படவிருக்கின்ற பொதுக்கட்டமைப்பில், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் உரியமுறையில் அங்கீகரிக்கப்படவேண்டும். அத்தோடு மட்டுமல்லாமல் பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் முஸ்லிம்களும் சமதரப்பாக அதில் கையெழுத்திட வேண்டும். இல்லையெனில் முஸ்லிம் மக்களின் போராட்டம் வெடிக்கும் என்று முஸ்லிம் பிரதிநிதிகள் ஹெல் ஸனிடம் வலியுறுத்திக் கூறினார்கள்.


பதிலளித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் "முஸ்லிம்கள் தனியான சமூகத்தினர் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன், அவர்களின் அரசியல் அபிலாஷைகளையும், உணர்வுகளையும் நன்கு மதிக்கின்றேன்" - என்றார்.

"ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மிகவும் மோசமாக முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் நிச்சயமாகத் தங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் அரச பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கின்றார்கள். நாங்கள் சண்டை பிடிக்கும் இருதரப்பினரையும், சமாதான வழிக்குக் கொண்டுவரவே இலங்கைக்கு வந்தோம். பொதுக்கட்டமைப்பில் யார் கையெழுத்திட வேண்டும் என்பதை எங்களால் தீர்மானிக்க முடியாது. இவற்றை அரசின் ஊடாக நீங்கள் தீர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஒருமித்த கருத்து ஏதும் கிடையாது" - என்று கூறினார்.

(க-3)

# நயினாதீவு செம்மணத்தம்புலம்
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
## அதிசுந்தர திரிதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

## 24-06-2005 வெள்ளிக்கிழமை



### ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் தனிப்பெருமை பெற்று விளங்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கொண்டு விளங்கும் நயினாதீவில் அருள்மழை பொழிந்து கொண்டிருக்கும் செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமானுக்கு மகோன்னதமாக நிர்மாணிக்கப் பெற்றுள்ள இராஜகோபுரத்திற்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்*
*குருமஹா சந்நிதானம், ஆதி முதல்வர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்*

### பிரதம சிவாச்சாரியாரின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தான தர்மங்களும் நீர்வளம், நிலவளம், கல்வியறிவு சிறந்து விளங்கும் நயினாதீவு தெற்கு செம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானுக்குத் திரிதள இராஜகோபுரமும் அழகிய மணிமண்டபமும் அமைத்து கனடா வாழ் நயினை மக்களும் ஆலய அறங்காவலர்களும் எடுத்த முயற்சியினால் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

இந்த அறப்பணியிலே தம்மை இணைத்த அனைவருக்கும் விநாயகப் பெருமானின் மெய்யடியார்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க எனது நல்லாசிகளைக் கூறி வாழ்த்தி வணங்குகின்றேன்.

சிவப்பிரம்மஸ்ரீ
**நா. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார்,**
பிரதம குரு, உற்சவ குருமணி, வேத சிவாகம ஜோதிட சிகாமணி

### வாழ்த்துச்செய்தி

உலகக்கலை அரங்கிற்குத் தமிழ் அளித்த பெருங் கொடை கோபுரக்கலையாகும். சைவத் தமிழ் பண்பாட்டின் சின்னமாகக் கோபுரம் விளங்குகின்றது. இது தூலலிங்கமாக வணங்கப்படும் பெருமைக்குரியது. கோபுரம் என்பது ஆரம்பத்தில் பசுக்கள் உறையும் இடத்தின் வாயிலைக் குறித்துப் பின்னர் நகர் வாயில், அரண்மனை வாயில், திருக்கோயில் வாயில் என்பவற்றைச் சுட்டுவதாக விளங்குவதைக் காணலாம். சுடர்விட்டொளிரும் வேதிகையின் வடிவே கோபுரமாகும். தீயின் வடிவமாக விளங்குகின்ற கோபுரத்தினைக் கடந்து கோயிலுக்குள் எந்தத் தீய சக்திகளும் நுழைய முடியாதென்பதும் சைவ சமய நம்பிக்கையாகும்.

டாக்டர் **மா.வேதநாதன்**, எம்.ஏ, பி.எச்.டி,
*தலைவர், புறநிலைப் படிப்புகள் பிரிவு,*
*இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

### ஐங்கரனுக்கென அமைந்த இராஜகோபுரம்

விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்கவேண்டும் என்ற அவா அவர்தம் அடியார்கள் மனங்களிலே நீண்ட காலமாக இருந்து வந்தது. எம்பெருமானின் தாழ் பணிந்து அவனருள் பெற்று இன்று கனடாவிலே வாழுகின்ற அன்பர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றி எட்டாம் ஆண்டு ஒன்று கூடி எம்பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்க வேண்டும் எனத் தீர்மானித்தோம். நாட்டு நிலமைகளில் ஏற்பட்ட ஸ்திரம் அற்ற நிலமைகளால் எமது பணியில் தாமதங்கள் ஏற்பட்டது. இருந்தபோதும் எமது மனம் உறுதியாக இருந்தது. விநாயகனின் பலம் எம்மிடம் இருந்தது. இரண்டாயிரத்து நான்கிலே இப்பாரிய திருப்பணியை ஆரம்பித்தோம். இன்று மிகக் குறுகிய காலத்திலே திரிதள இராஜ கோபுரமும் மணிமண்டபமும் அமைத்து கும்பாபிஷேகம் காணும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றோம்.

இப்பெரும் பணியை நிறைவேற்ற எம் வேண்டுதலை ஏற்று எம்மோடு தோளோடு தோள் நின்ற எம் உறவுகளுக்கு விநாயகப் பெருமானின் பெருங் கருணையுடன் கூடிய எமது சிரந்தாழ்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

பணிவுடன்
**சிவப்பிரகாசம் தவவிநாயகன்,**
**நடராசா ஜெயசிவதாசன்,**
**சிவப்பிரகாசம் முருகவேள்.**

### ஆலய அறங்காவலர்கள் வாழ்த்து

விநாயகர் அல்லல்களைந்து அருள்வழி காட்டுபவர். முன்னை வினைகள் முழுவதும் களைந்து எல்லையில்லா ஆனந்தம் அளிப்பவர். எமது கிராமத்தில் செம்மணத்தம் புலத்தில் வீற்றிருந்து அவர் அருள்சுரப்பது நாம் பெற்றிருக்கும் பெரும்பேறாகும்.

அப்பனின் கோவில் மணியோசையிலே துயில் எழுந்து நம்பியாகத் தம்மைப் பாவனை செய்து குட்டிக் கும்பிட்டு, தோப்புக்கரணம் போட்டு வணங்கி வழிபட்டு கோவில் வீதியிலே ஓடிவிளையாடி இன்று கனடா நாட்டிலே வாழுகின்ற எமது ஊர் அன்பர்கள் இன்று விநாயகப் பெருமானுக்கு திரிதள இராஜகோபுரம் அமைத்து மஹா கும்பாபிஷேகம் செய்கிறார்கள் என்ற செய்தி எம்மை ஆனந்தத்தில் ஆழ்த்துகிறது.

இப்பணியும் இதில் தம்மை இணைத்துக் கொண்டவர்களுக்கும் பொருளுதவிகளை வழங்கிய புண்ணிய சீலர்களுக்கும் சகல செல்வயோகம் மிக்க பேரின்ப பெருவாழ்வு கிடைக்கவேண்டும் என விநாயகப் பெருமானின் பாதங்களைப் பணிந்து, கும்பாபிஷேக விழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

சுபம்
**மு.நா. நடராசா** (தலைவர்)
**நா. இராதாகிருஷ்ணன்** (செயலாளர்)
**நா.கா. கோபாலசிவம்** (பொருளாளர்)

### பெருமனதுடன் பாராட்டுகிறேன்

எம் பெருமான் விநாயகரின் நிழலிலே வாழ்ந்து இன்று கனடாவிலே வாழ்ந்து கொண்டிருக்கும் எம் உறவுகளின் பேராற்றலினாலே விநாயகப் பெருமானுக்கு இராஜ கோபுரம் அமையப்பெற்றிருக்கிறது. மிகக்குறுகிய காலத்திலே துல்லியமாகச் செயற்பட்டு இப்பாரிய திருப்பணியை நிறைவேற்றி இன்று கும்பாபிஷேகம் காணும் இவர்களை, பெருமனதுடன் பாராட்டுகிறேன். கும்பாபிஷேக விழா சிறக்கவும் இப்பெருந்தகைகளது பணி சிறக்கவும் வாழ்த்துவதுடன் விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்
**நா.காராளபிள்ளை**
முன்னாள் பொருளாளர்.

### சிறப்புறவே குடமுழுக்குச் செய்து வாழி

சக்தி மகன் வீரகத்தி விநாயகர்க்குச்
சர்வமத சந்நிதியாம் நயினைத் தீவின்
பக்திமயச் செம்மணத்தர் புலத்தின் பாங்கில்
பதியாவு திருக் கோவில் தனக்கோர் கோபுரம்
சித்தி பெற அமைத்திட்டு கும்பம் ஏந்திச்
சிறப்புறவே குடமுழுக்குச் செய்து போற்றி
நித்தியமும் நின்றிட்டோர், அன்பர், தொண்டர்;
நீள் நிலத்தில் அனுக்கிரகம் பெற்று வாழ்க!

நயினைக்கவிஞர் **நா.க. சண்முகநாதபிள்ளை.**

### முன்னாள் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எமது மூதாதையர்களினால் உருவாக்கப்பட்டு எம்மால் வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்ற விநாயகப் பெருமானுக்கு இன்று திரிதளத்தில் இராஜ கோபுரம் அமைத்துக் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டும் மனமகிழ்வடைகின்றேன். எவரும் எதிர்பாராதவகையில் கருணை உள்ளம் கொண்ட பெருமக்களினாலும் விநாயகரின் அருளுடனும் எம்பெருமானுக்கு இராஜ கோபுரம் அமைந்ததையிட்டு பெருமை அடைவதுடன் இக்கும்பாபிஷேக விழா சிறக்கவும் விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கவும் விநாயகப்பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

**சி.நா.கணேசு** முன்னாள் தலைவர்.


## ◆◆◆◆◆◆◆ கும்பாபிஷேக விழாச் சிறப்புற வாழ்த்துவோர் ◆◆◆◆◆◆◆

(36867)(50-14-11)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் மற்றும் விக்னேஸ்வரா படகு சேவை, வாங்களாவடி, நயினாதீவு -06 | அபினஜா ஸ்ரோர்ஸ், 5 ஆம் வட்டாரம், நயினாதீவு. | எம்.ஜே. எலைவ்ற் பினாணோர்ஸ் அன்ட் கேற்றறிங் கனடா நாட்டில் உங்கள் மங்களகரமான நிகழ்வுகளுக்கு இரா. திருலதனன், நடா. ஜெயசிவதாசன் | மாணிக்கவாசகர் றேட் சென்ரர், 6 ஆம் வட்டாரம், நயினாதீவு. | அன்பு ரெக்ஸ் ஜுவுளி ஸ்தாபனம், கனடா | நல்லூர் குமரன் ஜுவுளி சமுத்திரம், கனடா; அன்பு ரெக்ஸ் ஜுவுளி ஸ்தாபனம் கனடா |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குமாரவேல் அன்கோ, கொழும்பு. | இந்திரன் வீடியோ, நயினாதீவு - 07 | குறோப் றேடர்ஸ், பஜார் வீதி, வவுனியா. | நியூ சண் அரிசி ஆலை, கோவிற்குளம், வவுனியா. நியூ அசோகன் அரிசி ஆலை, இறைம்பைக்குளம், வவுனியா. | ஈஸ்வரா லொட்ஜ், நாகை இன், சுமங்கலி ESTEE றெஸ்ட், அபிராமி லொட்ஜ் | கிருஷ்ணபவான், பஜார் வீதி, வவுனியா. | நெக்டர் கபே அன் கூல்பார், பஜார் வீதி, வவுனியா. |
| வாகீசன் களஞ்சியம், முதலாம் வட்டாரம், நயினாதீவு. | நடா. ஜெயசிவதாசன் B.Com. திருமணப்பதிவாளரும் கல்விச் சேமிப்பு நிதி ஆலோசகரும் கனடா | தர்ஷிகன் வீடியோ ஓடியோ சாயீஷன் போட்டோ, 6 ஆம் வட்டாரம், நயினாதீவு. | லக்ஸ்மி பவான் சைவ உணவகம், ஒல்கொட் மாவத்த, கொழும்பு. | மக்மிலன் புத்தகசாலை, கொழும்பு, யாழ்ப்பாணம். | ஐடியல் ரைல் அன்ட் காபேற், கனடா. | சிவம் வெற்றிலைக்கடை, மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம். |
| வித்தியா ஸ்ரோர்ஸ், 7 ஆம் வட்டாரம், நயினாதீவு. | அம்பிகை களஞ்சியம், முதலாம் வட்டாரம், நயினாதீவு. | ஞானம் புத்தகசாலை, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | அஜந்தா ஹொட்டேல், ஒல் கொட் மாவத்த, கொழும்பு. | குகன் மோட்டோர்ஸ், கொழும்பு, வவுனியா. | மிபிறண்ட் குறூப், கனடா. | முச்சக்கர உரிமையாளர் சங்கம், நயினாதீவு. |
| ஸ்ரீகணேச சனசமூக நிலையம், நயினாதீவு. | பத்மா ஸ்ரோர்ஸ் மற்றும் பந்தல் சேவை, 6 ஆம் வட்டாரம், நயினாதீவு. | பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், கொழும்பு | தனியார் படகுரிமையாளர் சங்கம், நயினாதீவு. | ஹொண்டா மோட்டோர்ஸ், வவுனியா. | அன்னபூரணி விலாஸ், அம்மன் கோவிலடி, நயினாதீவு. | தர்ஜினி அமுதம், மேற்கு மார்க்கட், யாழ்ப்பாணம். |

# நானிலமெங்கும் அருளாட்சி புரியும் நயினை நாயகி தேரேறி வந்தாள்

நயினை நாகபூசணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இம்மாதம் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது. நாளாந்தம் நயினைத் தாயைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு திரண்டனர். தெப்பத்திருவிழாவும், பூங்காவனமும் நேற்று நடைபெற்று. பெருந்திருவிழா முடிவுற்றது.

நயினாதீவை மட்டுமல்ல அனைத்து ஊரையுமே தன் பார்வைக்குள் வைத்து அருளாட்சிபுரிபவள் நயினை நாகபூஷணி அம்பாள். அவள் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகின்றாள். அலைகடலின் அருகே அமர்ந்திருந்து அவளை நாடிச்செல்லும் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து கொண்டிருக்கிறாள். அவளை நாடிச் செல்பவர்களை ஒருபோதும் அவள் கைவிட்டதேயில்லை அத்தகைய பெருமை கொண்ட நயினை அம்மனின் தேர்த் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கேட்கும் வரங்களைக் கொடுக்கும் நயினைத்தாய் தேர்மீதேறி பக்தர்கள் புடைசூழ மங்கள வாத்தியங்கள் முழங்க, அங்கப்பிரதிஷ்டை, காவடி, கற்பூரச்சட்டி என நேர்த்திக் கடன்கள் நிறைவேற்ற, பட்டாடை துலங்க, மஞ்சள் பூமாலை சூடி கம்பீரமாக வலம்வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி.

சிவனாரின் மூத்த மகனார் தேரேறி முன்செல்ல வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமான் அடுத்த தேரில செல்ல நயினை நாகபூஷணி அம்பாள் சித்திரத்தேரில் பவனி வந்தாள்.

மூன்று தேர்களும் ஒன்றின்பின் ஒன்றாக ஆலயத்தை வலம்வந்த போது, பக்தர்களின் துன்பங்கள், வினைகள் அனைத்தும் அவற்றின் சில்லுக்குள் நசிபட்டு அழிவடைந்தன.

ஒரு பக்கம் பக்தர்களின் பஜனை பாடல்களும், மறுபக்கம் 'அரோகரா' கோஷங்களும், ஆலயச் சூழலைத் தெய்வீகமயப்படுத்திக் கொண்டிருந்தன. கற்பூரமணம் ஆலயச் சூழலைப் புனிதப்படுத்திக் கொண்டிருந்தது.

பல்வேறு இடங்களில் இருந்தும் நாகம்மாளின் தேர்க்கோலக் காட்சியைக் கண்டுகளிக்க வந்த பக்தர்களின மனங்களில் ஒரே பூரிப்பு; கண்களில் ஆனந்தக் கண்ணீர்; பக்தர்களின் குறைகளை ஒவ்வொன்றாகக் காதில் போட்டபடி வீதியுலாவை முடித்து இருப்பிடத்தை வந்தடைந்தாள் எம் பெருமாட்டி.

எம் பெருமாட்டியின் தேரின் பின்னால் ஆயிரககணக்கான பக்தர்கள் பிரதிஷ்டை செய்தும், அடி அளித்துக் கொண்டும் வந்து வாசலை அடைந்தனர்.

நாகம்மாளின் தேர் இருப்பிடத்தை அடைந்ததும் பக்தர்கள் வெற்றிக் களிப்பில் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்துக் குதூகலித்தனர். தேரின் வடத்தை எடுத்துச் சென்று அம்பிகையின் பாதங்களில் வைத்து வணங்கினர். தொடர்ந்து தேரில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு அர்ச்சனை வழிபாடுகள் நடைபெற்றன. அத்துடன் விநாயகப் பெருமான், முருகப் பெருமான் ஆகியோருக்கும் அர்ச்சனைகள் செய்யப்பட்டன.

ஆலயச் சூழலில் தாக சாந்தி மடங்களைத் தொண்டு நிறுவனங்கள், அமைத்திருந்தன. அமுதசுரபி அன்னதான மடத்தில் அன்னையின் அருளால் மனம் நிறைந்த பக்தர்களுக்கு வயிறாற உணவிடப்பட்டது.

அம்பாளை நாடிவந்த பக்தர்களைக் கடற்பயணத்தில் பாதுகாக்கும் பொருட்டு நீச்சல் வீரர்களுடன் இரண்டு படகுகள் கடலில் வலம் வந்து கொண்டிருந்தன. இந்த ஏற்பாடு பலராலும் பாராட்டப்பட்டது. - கங்கா

# நல்வழியில் வாழ்வை அமைக்க வழிகாட்டும் புருடார்த்தங்கள்

இந்துக்களினுடைய தனிமனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையின் ஊடாக இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்கின்ற இறுதி இலட்சியத்தைப் பெற்றுக்கொள்ளவும் புருடார்த்தங்கள் வழிசமைக்கின்றன.

புருடாத்தங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நான்கு படிமுறைகள் மூலம் எம்மை நல்வழிப் படுத்துகின்றன.

நான்கு புருடார்த்தங்களும் இறைவனால் ஆக்கப்பட்டவை என்றும் அவற்றைப் பின்பற்றி நடப்போர் மேல்நிலை அடைவார்கள் என்றும் அதனைப் புறக்கணிப்போர் நரகத்தை அனுபவிக்க நேரிடும் என்றும் கூறப்படுகின்றது.

அறமானது மனிதனுடைய அறிவாற்றல்களை வளர்த்து அறத்தின் மூலம் பொருள்களைப் பெற்று இன்பத்தினை அனுபவிக்கும்போது மோட்சம் இலகுவாகக் கிடைக்கும் என்று இந்துமத தத்துவம் விபரிக்கின்றது.

'அழுக்காறு அவா வெகுளி இன்னாற்சொல் நான்கும் இழுக்காயியன்றது அறம்' என்பதற்கு அமைய, எம்மிடம் காணப்படுகின்ற பொறாமை, ஆசை, கோபம் ஆகிய மிருகக் குணங்களை நீக்கி அன்பு, கருணை, பொறுமை, நேர்மை என்கின்ற தெய்வீகக் குணங்களை மேலோங்கச் செய்கின்றது.

ஞானக்கதிர்

நாம் தீயவழியில் பொருள்களைப் பெறாது நல்வழியில் பெறவேண்டும்.

நாம் பல்வேறுபட்ட கடமையினைச் செய்வதற்குப் பொருள் அவசியமானதாக அமைகின்றது. இவ்வாறாகப் பொருள்களை அறவழியில் பெறுவதன்மூலம் இல்வாழ்க்கை சிறப்புடையதாக அமையும்.

**வ.சுதாகரன்**

ஆரம்பத்தில் தனித்தனியாக வாழ்ந்தவர்கள் கணவன் - மனைவியாகப் புரிந்துணர்வோடு வாழ்கின்றபோது செலுத்தப்படுகின்ற அன்பானது, தொடர்ந்து தங்கள் பிள்ளைகள் மீது செலுத்தப்படும். இதனால், இவர்களுடைய வாழ்க்கை அருள்வாழ்க்கையாக மாறுகின்றது.

- இவ்வாறாக அறம் பொருளுக்கும், பொருள் இன்பத்திற்கும் காரணமாக அமைகின்றபோது இறைவனோடு இரண்டறக்கலத்தல் என்கின்ற வீடுபேறு தானாகவே கிடைக்கப் பெறும்.

இவ்வீடு பேறு என்பது பிறவித்துன்பத்திற்குக் காரணமாக அமைகின்ற மும்மலங்களில் இருந்து விடுபட்டு நித்தியானந்தம் எனும் சிறப்புநிலையை அடைவதே ஆகும். இதனைக் 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம், பரனை நினைத்து இம் மூன்றையும் விட்டதே பேரின்பம்' என ஔவையார் கூறியுள்ளார். இவ்வாறாக இந்துக்களாகிய நாம் அறத்தின் வழியில் பொருள்களைப் பெறுவதன்மூலம் இன்பத்தை அனுபவித்து வாழ்கின்றபோது இறுதி இலட்சியமாகிய இறைவனோடு இரண்டறக் கலத்தில் என்கின்ற வீடுபேற்றினை அடைந்துகொள்ளமுடியும். ★

# பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்படாது என கல்வியமைச்சு உறுதி!

காரைதீவு,ஜூன்24

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்படமாட்டாது. அது தொடர்ந்து இயங்கும் என்ற உறுதியான உத்தரவாதத்தைக் கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் வழங்கியுள்ளார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை கல்வியமைச்சின் செயலாளரை மேற்படி சங்கத்தினர் சந்தித்தனர். இச்சந்திப்பில் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லுடன், பதில் நிர்வாகமுகாமையாளர் கே.எல்.எல். விஜேரத்ன, ஆசிரியர் கலாசாலை ஆணையாளர் திருமதி லதா ஆகியோரும் உடனிருந்தனர். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவர் என்.இராஜநாதன், பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையைக் கைவிடுமாறும், பயிற்றப்படாத பலநூறு ஆசிரியர்கள் இன்னும் இருப்பதால், அதைமூடவேண்டாமெனவும் சங்கக் குழுவினர் அப்போது வேண்டுகோள் விடுத்தனர்.

பலாலி ஆசிரியர் கலாசாலை பாரம்பரியமான கலாசாலை. அதனை மூடுவதில் தனக்கு விருப்பமில்லையென்று செயலர் தாரா டி மெல் அப்போது கூறினார்.

மேலும், பலாலி ஆசிரியர் கலாசாலையை மீண்டும் தொடர்ந்து இயங்க வைப்பது தொடர்பிலான கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி கல்வியமைச்சில் நடைபெறும். அக்கூட்டத்திற்கு பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர், வேலணை மத்திய மகாவித்தியாலய அதிபர், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஆகியோர் சமுகமளிக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் கேட்டுக் கொண்டார்.

பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடாமல் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படலாமெனத் தெரிகிறது.

இதேவேளை, பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம் துரிதப்படுத்தப்பட வேண்டுமெனச் சங்கத் தூதுக்குழுவினர் கேட்டதற்கு, 2001 வரையிலான காலப்பகுதியில் கடமையாற்றியோரின் பட்டியல் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கு உடனடியாக நேர்முகப்பரீட்சையை நடத்தி நியமனம் வழங்க அங்கீகாரம் அளிப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் பதிலளித்தார்.

அடுத்த கட்டமாக கடந்த மே மாதம் 31 ஆம் திகதிவரை கடமையாற்றிய பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சையினூடாக நிரந்தர நியமனம் வழங்கப்படும. அதுவரை பொறுத்திருக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-84)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்24

நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் கணக்கீடு பாடத்துக்கான மதிப்பீட்டுப் பணி வழக்கம்போல் யாழ்ப்பாணத்திலும் இடம்பெறவுள்ளது.

கணக்கீட்டுப் பாடத்துக்கான உதவிப் பரீட்சகர்களாக நியமனம் பெற்றவர்கள் கொழும்பில் பரீட்சைத் திணைக்களம் கடந்த 20 ஆம் திகதி நடத்திய கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்காத உதவிப் பரீட்சகர்களும் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடலாம் என்று தற்போது கணக்கீடு பாடத்துக்கான இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

உதவிப் பரீட்சகர்கள் அனைவரும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்க வேண்டுமென்று அவர் கேட்டுள்ளார். (ஒ)

## நயினை தேர்த்திருவிழாவில்...









(படங்கள்: தீபா, கங்கா)

# வலி.மேற்குப் பிரதேசத்தில் மலசலகூடம் அமைக்க உதவி

வலி.மேற்கு.ஜூன்24

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள அராலிப் பகுதியில் மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்குப் பட்டினிகக்கு எதிரான நிறுவனத்தினர் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி வடக்கு, அராலி மத்தி, அராலி தெற்கு ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் வருமானம் குறைந்த - வசதிகளற்ற - மலசல கூடம் இல்லாத - குடும்பங்களுக்கு மலசல கூடங்களைப் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் வெளிக்கள அலுவலர்கள் தற்போது இப்பகுதிகளில் தேவை மதிப்பீட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-175)

## சந்நிதியான் ஆச்சிரமம் உதவி

தொல்புரம்,ஜூன்24

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் மொத்தம் நூறு முன்பள்ளிகளுக்கு வாரம் தோறும் தலா 150 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், நூறு முன்பள்ளிகளுக்கும் சத்துணவாக பயறு, அவல், கடலை, பால்மா, கௌபி, ஜீவாகாரம், சீனி ஆகியவையும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகச் சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் செ.மோகனதாஸ் சுவாமி தெரிவித்தார்.

(ஒ-119)

### முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 17 - 06 - 1940 |  | 25 - 05 - 2005 |

**அமரர் பூதப்பிள்ளை நவரத்தினம்**

(பீற்றர்)

அன்பும் பண்பும் நிறைந்த ஆருயிர்த் தெய்வமே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

*நூலக வீதி,*
*உடுவில் கிழக்கு,சுன்னாகம்.*

குடும்பத்தினர்.

(36869) (32-14-24)

# உதவி ஆணையாளர் அலுவலகத் திறப்புவிழா

தென்மராட்சி,ஜூன்24

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு யாழ். பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை இக்கட்டடத்தினைத் திறந்துவைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## அடக்க ஆராதனை

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள், பாக்கியவான்கள்"

**திருமதி பியங்கா மனோராணி**



வடடுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பியங்கா மனோராணி கந்தையா அவர்கள் 03-06-2005 அன்று லண்டன் தேசத்தில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் போதகர் ஹரிகந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற லவல் (Lovell) திருமதி லவலின் அன்பு மகளும் ஆவார். திருமதி கந்தையா அவர்கள் கடந்த 18 வருடகாலமாக கானான் ஜெப ஆலயத்தின் பொதுக் காரியதரிசியாகப் பணியாற்றினார்.

அன்னாரின் சாட்சியின் ஆராதனை காலை 9 மணிக்கு கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து அன்னாரின் அஸ்தி மாலை 3 மணிக்கு இராச வீதியில் அமைந்துள்ள கானான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபை மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலை,*
*கோப்பாய்.*

தகவல்:
போதகர்
கானான் ஜெப ஆலயம்

(36893)(46-14-24)


# மங்களகர திறப்பு விழா

திருநெல்வேலி நகரில் புதுப் பொலிவுடன் குடும்பத்தினருடன்
குதூகலமாக உங்கள் தேவைகளை நீங்களே தெரிவுசெய்து மகிழ்ந்திட
இன்று பகல் 12.30 மணியளவில் புதிய உதயம்

**ஜீவா (f)பூட் ஸ்ரவ் சப்ளையர்**

* குறைந்த விலை * உயர் தரம்
* நவீன வசதிகளுடன் கூடிய விற்பனைக் காட்சியகம். * இல்லத்தரசிகளின் மனங்களைக் கவரும்

திருநெல்வேலி நகரில் ஒரே விற்பனைக் காட்சியகம்

**JEEVA FOOD STUFF SUPPLIER**

*எமது வியாபாரம் சிறக்க வாழ்த்திச் சிறப்பிக்கும் வண்ணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

43/4 பலாலி சாலை,
திருநெல்வேலி.

தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர், பணியாளர்கள்.

வியாபாரம் சிறந்திட வாழ்த்திடுவோர்.



| | | | |
|---|---|---|---|
| யாழ் மொபைல்ஸ்<br>பலாலி சாலை,<br>திருநெல்வேலி<br>T.P.: 0714168418 | துர்க்கா ரேடர்ஸ்<br>பலாலி சாலை<br>திருநெல்வேலி. | அங்கர் பாமசி<br>கோயில் வீதி,<br>முடமாவடி.<br>T.P.: 0714 168418 | ஜீவா ரேடர்ஸ்<br>பிள்ளையார் வீதி,<br>திருநெல்வேலி<br>T.P.: 0773102[illegible] |
| ஐங்கரன் மோட்டோர்ஸ்<br>காரைநகர் வீதி,<br>மானிப்பாய்.<br>T.P.: 021 222 5412 | மிலேனியம் ரெஸ்ரரேன் அன் கெஸ்ட்கவுஸ்<br>இராமநாதன் சாலை,<br>கலட்டி, யாழ்ப்பாணம்.<br>T.P.: 021 222 2810 | நேருஜா பான்சி கவுஸ்<br>முனியப்பர் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P.: 0714168357 | |

(36880) (83-)



## தொலைபேசி இணைப்புகளின்றி உறவுகளின் தொடர்பின்றித் தவிக்கும்

யாழ்.மக்களுக்கு அதிரடி விலைக் கழிவில்

இணைப்புகளுடன் கூடிய மேசைத் தொலைபேசிகள்
9,500/=

யாழ். மொபைல்ஸ் வழங்கும்



வெளிசெல்லும் அழைப்பு மிகக் குறைந்த கட்டணம்

வெளிநாட்டு அழைப்புகளுக்கு SLT கட்டணம்

உள்வரும்அழைப்பு முற்றிலும் இலவசம்



12,500/=

, வெளிநாட்டில் வசிக்கும் தாயக உறவுகளுடன், நண்பர்களுடன் நிறையப் பேச, நிறைய சிரிக்க, அன்பை வளர்க்க இன்றே நாடுங்கள். Mobitel

YARL MOBILES
யாழ்.மொபைல்ஸ்
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.

T.P.: 0714 168418,
0714 168525

(36881)(26-14-24)

'அஸ்ரா' கிண்ண கிரிக்கெட்

# சென்.பற்றிக்ஸ், யாழ்.சென்ரல் 15 வயதுப் பிரிவில் வென்றன

யாழ்ப்பாணம்,ஜுன்24

'அஸ்ரா' வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் நடந்த இரு ஆட்டங்களில் சென்பற்றிக்ஸ், யாழ்.சென்ரல் ஆகியன வெற்றிபெற்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டினையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றனர்.

துஷ்யந்தன் 15 ஓட்டங்களினையும் நவநீதன் 11 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மிலாண்டோ ஜெனிபர் 4 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டினையும் கேதீஸ்ஷன் 31 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் கஜமுகன் 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3 விக்கெட்டினை இழந்து 203 ஓட்டங்களினைப் பெற்றது.

நவதீபன் 53 ஓட்டங்களினையும் ரகல்ஷன் ஆட்டம் இழக்காமல் 72 ஓட்டங்களையும் நிலோஷன் ஆட்டம் இழக்காமல் 26 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தனது இரணடாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டினையும் இழந்து 97 ஓட்டங்களினைப் பெற்றது.

துஷ்யந்தன் 30 ஓட்டங்களினையும் வென்ஷாக்கர் 15 ஓட்டங்களினையும் கஜீபன் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

கேதீஸ்ஷன் 12 ஓட்டங்களினைக் கொடுத்து 5 விக்கெட்டினையும் லதீசன் 12 ஓட்டங்களைக கொடுத்து 3 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

அன்றையதினம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 63 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்களினைப் பெற்றது.

ஜெயந்தன் 44 ஓட்டத்தினையும் ஜெனராஜ் 21 ஓட்டத்தினையும் சிறிராம் 22 ஓட்டத்தினையும் நிதர்சன் 21 ஓட்டத்தினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மயூரதன் 35ஓட்டங்களினைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் தனுயன் 44 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் ரதீசன் 16 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

ஹாட்லிக் கல்லூரி அணியினா ஆட்டத்தினை இடைநிறுத்தி யாழ்.மத்திய கல்லூரி அணியைத் துடுப்பெடுத்து ஆடும்படி பணித்தது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 3 விக்கெட்டினை இழந்து 221 ஓட்டங்களினைப் பெற்றனர்.

ஜனேசன் 62 ஓட்டங்களினையும் மயூரன் 112 ஓட்டங்களினையும் ஸ்டிபன் 15 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

கரிகரன் 33 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் ஜெயந்தன் 45 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

(3-190)

## கே.ஸி.ஸி.ஸி கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவருகின்ற கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இவ்வாண்டும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் லீக் முறையில் நடைபெறும் எனவும் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்த விளையாட்டுக்கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி நேற்றாகும்.

அடுத்தமாதம் 2 ஆம் திகதி இந்தச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகும். (3-203)

## தாச்சிச் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கம், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது விளையாட்டு மைதானத்தில் யாழ்.மாவட்ட ரீதியில் லீக் முறையில் நடதததும் தாச்சிச் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

நாளை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

✦ பிற்பகல் 4 மணி - கைதடி வளர்மதி வி.க.எதிர் இருபாலை விக்னேஸ்வரா வி.க.

✦ மாலை 5 மணி - நாவற்குழி அருள் வி.க எதிர் கொக்குவில் வராகி வி.க. (3-75-203)

## நாளையும் ஞாயிறும் நடக்கும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்24

அஸ்ரா கிண்ணத்திற்காக அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையில் 17 வயதுப் பிரிவினருக்காக நடத்தப்படும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் நாளையும் மறுநாளும் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

**சனிக்கிழமை**

எ பிரிவு

✦ ஹாட்லிக் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

(ஹாட்லி மைதானம்)

✦ கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி

(கொக்குவில் இந்து மைதானம்)

பி பிரிவு

✦ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

✦ கிளிநொச்சி மகா வித்தியாலயம் எதிர் யூனியன் கல்லூரி

(கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

**ஞாயிற்றுக்கிழமை**

எ பிரிவு

✦ யாழ்.இந்து கல்லூரி எதிர் விக்ரோறியாக் கல்லூரி

(யாழ்.இந்து மைதானம்)

பி பிரிவு

✦ யாழ்.மத்திய கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிககன் மிசன் கல்லூரி

(யாழ்.மத்திய கல்லூரி மைதானம்).(3-190)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜுன் 24

வடமராட்சி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக் மைதானத்தால் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

✦ பிற்பகல் 3.30 மணி - ஸ்கந்தா வி.க எதிர் திக்கம் இளைஞர் வி.க.

✦ பிற்பகல் 4.30 மணி - றேஞ்சர்ஸ் வி.க எதிர் கலட்டி ஐ.வி.க. (3- 203)

விம்பிள்டன் டெனிஸ்:

# மூன்றாவது சுற்றில் கிலிஜஸ்டஸ், மைஸ்கினா இரண்டாம் சுற்றில் சானியா போராடித் தோல்வி

விம்பிள்டன் டெனிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு கிலிஜஸ்டர்ஸ், மைஸ்கினா முன்னேறினர். இந்தியாவின் சானியா மிர்சா இரண்டாவது சுற்றில் போராடித் தோல்வியடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டெனிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாம் சுற்று ஆட்டம் ஒன்றில் 15ஆம் நிலை வீராங்கனையான கிம் கிலிஜஸ்டர்ஸ், அமெரிக்காவின் மரியா இன்வினைச் சந்தித்தார்.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கிலிஜஸ்டர்ஸ் 6:1, 6:1 என்ற நேர்செட்களில் எளிதான வெற்றிபெற்றார். இந்த வெற்றியைப் பெற இவருக்கு 44 நிமிடங்களே தேவைப்பட்டன.

மற்றோர் ஆட்டத்தில் 9ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டாசியா மைஸ்கினா, ஜப்பானின் நகமுராவை 6:4, 6:3 என்ற செட்களில் வீழ்த்தினார்.

இன்னோர் ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா, 5ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் ஸ்வெட்லானா கஸ்னட்சோவாவைச் சந்தித்தார். முதல் செட்டில் 4:6 என்ற புள்ளிக் கணக்கில் தோற்றபோதும், இரண்டாம் சுற்றில் 7:6என்ற புள்ளிக் கணக்கில் சானியா வெற்றி பெற்றார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் ஆதிக்கம் செலுத்திய கஸ்னட் சோவா இறுதியில் 6:4, 6:7, 6:4 என்ற செட்களில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றோர் ஆட்டத்தில் சேர்பியாவின் ஜெலினா ஜோன்கோவிக் 6:3, 7:5 என்ற செட்களில் ஆர்ஜென்ரீனாவின் மரியானா ஒலிவாவை வீழ்த்தினார்.

இதேவேளை, ஆண்கள் பிரிவில் நடைபெற்ற இரண்டாம் சுற்று ஆட்டங்களில் நடப்புச் சம்பியன் ரோஜர் பெடரர், செக் குடியரசின் இவோ மினாரை எதிர்த்தாடினார். இதில் பெடரர் 6:4, 6:4, 6:1 என்ற செட்களில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னோர் ஆட்டத்தில் ரஷ்யாவின் மாரட் சபின் ஆஸ்திரேலியாவின் மார்க்பிலிப் போஸ"டன் மோதினா. இதில் சபின் 7:6, 7:6, 6:4 என்ற செட்களில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (க-3)



ஐரோப்பிய பெண்கள் அணிகளுக்கிடையேயான யூரோ - 2005 உதைபந்தாட்டப் போட்டியின் இறுத ஆட்டத்தில் நோர்வே அணியை 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியில் ஜேர்மனி அணி வீராங்கனைகள்.

விளையாட்டு

# ஸிம்பாப்வே சுற்றுப்பயணம்: நியூஸிலாந்து அணி அறிவிப்பு

## நீண்ட நாள்களுக்குப் பிறகு பொண்ட் களமிறங்குகிறார்

ஸிம்பாப்வேத் தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டது. காயம் குணமான நிலையில் ஷேன் பொண்ட் நீண்ட நாள்களுக்குப் பிறகு மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

நியூஸிலாந்து அணி ஓகஸ்ட்டில் இரண்டு டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக ஸிம்பாப்வே செல்கிறது. இதற்கான நியூஸிலாந்து அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் குணமான நிலையில் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான ஷேன பொண்ட் மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

முத்தரப்புத் தொடரில் நியூஸிலாந்து, ஸிம்பாப்வே அணிகளுடன் இந்தியாவும் விளையாடுகிறது.

முன்னதாக ஸிம்பாப்வே அதிபர் றொபேர்ட் முகாபே வெள்ளை இன மக்களுக்கு எதிராக ஆட்சி நடத்துவதால் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற அணிகள் அங்கு சுற்றுப்பயணம் செல்லமறுத்தன. பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) நெருக்கடியினால் இரண்டாம் தர அணியை அனுப்பியது. இந்த நிலையிலேயே நியூஸிலாந்து அணி அங்கு செல்லவுள்ளது. நியூஸிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் இச்சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்யுமாறு கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனால், பாதுகாப்புக் காரணங்களுக்காகப் போட்டியை ரத்துச் செய்யும் பட்சத்தில் நியூஸிலாந்து கிரிக்கெட் சபை சுமார் 20 கோடி ரூபாவை ஐ.சி.சிக்கு அபராதமாக வழங்க வேண்டும். இதனால் நியூஸிலாந்து அணி கடடாயம் அனுப்பப்படும் என அந்நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் மார்ட்டின் ஸ்னேடன் கூறியுள்ளார்.

டெஸ்ட் தொடருக்கான நியூஸிலாந்து அணி விவரம்:-

ஸ்டீபன் பிளமிங் (அணித்தலைவர்), கம்மிங், ஜேம்ஸ் மார்ஷல், ஹேர்மிஷ் மார்ஷல், ஸ்கொட் ஸ்டைரிஸ், அஸ்லே, வின்சென்ட், ஓரம்,மெக்குலம், வெட்டோரி, மில்ஸ், பிராங்லின் வைஸ்மன், ஷேன் பொண்ட், கிறிஸ் மார்ட்டின்.

ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணி:-

பிளமிங் (அணித்தலைவர்), அஸ்லே, ஹேர்மிஷ் மார்ஷல், ஸ்டைரிஸ், வின்சென்ட், மெக்மிலன், ஓரம், கெய்ன்ஸ், மெக்குலம், வெட்டோரி, அடம்ஸ், மில்ஸ், பட்லர், பொண்ட். (க-3)

# பேய்களை நேரில் பார்த்தேன் என அலறுகிறார் ஆஸி.வீரர் வொட்சன்

ஆஸ்திரேலிய அணியை பேய் வேறு பயமுறுத்துகிறதாம். வெள்ளை உடையில் அலையும் பேய்களை தாம் நேரில் பார்த்தார் என அலறுகிறார் அந்த அணியின் வேகப் பந்து வீசசாளர் ஷேன் வொட்சன்.

நாட்வெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய வீரர்கள் செஸ்டர் - லீ - நகரில் உள்ள லம்லி கேசில் ஹோட்டலில் தங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் அதிகாலை நான்கு மணிக்கு திடீரென எழுந்த வொட்சன், பேய் அலைவதைப் பார்த்துப் பயந்து போயுள்ளார். பின்னர் பிரட்லீ அறைக்குள் சென்று தஞ்சம் அடைந்தார்.

அந்த அனுபவம் குறித்து வொட்சன் கூறுகையில் -

"ஜன்னல் திரையை மூடிவிட்டு படுக்கப் போனேன். சுமார் அதிகாலை நான்கு மணியளவின் போது கண் விழித்தேன். அப்போது ஜன்னல் திரை விலகியிருந்தது. அதன் வழியாக வெளியே பார்த்தபோது அந்த பயங்கரம் எனக்குத் தெரிந்தது. வெள்ளை உடையில் நிறைய பேய்கள் நடந்து சென்று கொண்டிருந்தன.

"நான் கூறுவது கனவு அல்ல. உண்மையைத் தான் சொல்கிறேன். ஏனென்றால், அப்போது கைத்தொலைபேசியில் தகவல் ஒன்றை அனுப்பிக் கொண்டிருந்தேன்" - என்று நடுங்கியவாறு கூறினார்.

இந்த ஹோட்டலில் கொல்லப்பட்ட ஒருவரின் ஆவி அலைவதாகக் கூறப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே ஹோட்டலில் தங்கிய மேற்கிந்திய வீரர்களும் பயந்து போயுள்ளனர்.

"இந்தச் சம்பவத்தால் வீரர்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை. மிகவும் களைப்பாக இருந்தார்கள். காலையில் தான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்கள்" - என ஆஸ்திரேலிய அணியின் ஊடக அதிகாரி தெரிவித்தார். (க-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின்
வெள்ளாம்போக்கட்டி பாலர் பாடசாலையில்
ஆரம்பக்கல்வியைப் பயின்ற

**செல்வி பொ.றினோசா**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையில் 9A, B பெறுபேற்றை பெற்றுள்ளார். அவர் மேன்மேலும் தனது கல்வியைத் தொடர்ந்து பல பட்டங்கள்பெற மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துபவர்: **செல்வராசா விஜயராணி**
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் வெள்ளாம்போக்கட்டி பாலர்பாடசாலை முன்னாள் ஆசிரியை.

(36895) (15-34)



## விற்பனைக்கு

அச்சக பயன்பாட்டிற்குரிய 32" கட்டர், சைனா பிளேற றிங், புறாவ் மெஷின், தமிழ், ஆங்கில எழுத்துகள் பேபுறேற்றர் மெஷின் ஆகியவை விற்பனைக்குண்டு.

தொடர்பு: றோயல் அச்சகம், டச்சு வீதி, சாவகச்சேரி.



## புதிய LAP TOP (HP) கணனி விற்பனைக்கு

3.0 M.Hz Processor, 40 GB Hard Disk, 512 Ram, Compo Drive, Video Out Blue tooth & Infraned Facilities.

**தொடர்பு: 0777-238266**

எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.


## நூல் வெளியீடு

நல்லூர்,ஜுன்24

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் முன்னாள் ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றிய கவிஞர் நெடுந்தீவு செ.மகேனின் "மனிதத்தைத் தேடி" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி முதல்வர் கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் க.ஆர்வலன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

முதல்மைப்பிரதியை பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் தீவக வலயம்) சி.மகேஸ்வரன் பெற்றுக்கொள்வார். (ஒ-111)

## படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜுன்24

கட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சாரமரத்தில் இருந்து தவறிவிழ்ந்து ஒருவர் படுகாயமடைந்தார். அராலிப்பகுதியில் சமீபத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் என். தம்பிராசா (வயது-57) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-202-15)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 03 - 05 - 1935



விண்ணில் 25 - 05 - 2005

**திருமதி வைரமுத்து செல்லமணி**

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு வைரமுத்து செல்லமணி அவர்களின் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதிகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(36918) (39-15-34) குடும்பத்தினர்.



## விண்ணப்பித்து விட்டீர்களா?

வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பவர்களும் பேக்கரி உற்பத்திப் பொருள்களை விற்க விரும்புபவர்களும் 22.06.2005 உதயன் பத்திரிகையில் 04ஆம் பக்கத்தில் வெளியாகிய "உடனடி வேலை வாய்ப்பு" விளம்பரத்தைப் பார்வையிடவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**குணம் கிறீம்ஹவுஸ்,**
**பஸ் நிலையம், பருத்தித்துறை.**

(36916) (39-15-34) தொ.பே. 021 226 3325, 0777 515035


## புலமைப் பரிசில் பரீட்சை
## மாதிரி வினாத்தாள் இல. 13 விடைகள்

நேற்றைய 'உதயனில்' வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.13 இற்கான விடைகள் வருமாறு:-

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| (01) 2 | (02) 3 | (03) 2 | (04) 3 |
| (05) 4 | (06) 3 | (07) 4 | (08) 2 |
| (09) 3 | (10) 1 | (11) 3 | (12) 3 |
| (13) 1 | (14) 2 | (15) 2 | (16) 2 |
| (17) 1 | (18) 3 | (19) 16 | (20) 18 |
| (21) செவ்வாய் | (22) குட்டி | (23) விமானம் | (24) காவியம் |
| (25) ஆகாயம் | (26) ⊙☆- 38 | (27) △○-12 | (28) △ -o |
| (29) 2 | (30) 2 | (31) 2 | (32) 2 |
| (33) 1 | (34) 4 | (35) 4 | (36) 2 |
| (37) 3 | (38) 1 | (39) 2 | (40) 3 |

### வினாத்தாள் - II

(01)
1) முகில்கள்
2) வாழை, மாமரம்
3) நீர் வடிந்தது 4) மேகங்கள்
5) விண் 6) காய்கள்
7) வெயில் 8) முட்டி, திரண்டு
9) சாரல் 10) பழம் உதிர்ந்து விழ்ந்தது
11) Rain 12) Leaf
13) Fruits 14) Water
15) முகில்கள் 16) கூரை
17) காற்று 18) மரம்

(02)
1) பெண்களுக்கு மட்டும் 2) புகைத்தல் தடை
3) பேருந்து தரிப்பிடம் 4) ஆண்களுக்கு மட்டும்

(03)
1) 1 2) 3 3) 2 4) 4 5) 4
6) 4 7) 1 8) 2 9) 4 10) 2

(04)
1) பொருத்தமான வசனங்கள் எழுதப்பட்டிருத்தல் (நிகழ்கால வசனங்கள்)

(05)
1) ✓ 2) ✗ 3) ✓ 4) ✓ 5) ✓
6) ✗ 7) ✓ 8) ✗ 9) ✗ 10) ✓

(06)
1) 66.00 2) 93.00 3) 60.00 4) 35.00
5) 195.00 6) 12.50 7) 461.50

(07)
1) 3/8 2) 0.2 3) பி.ப 12.30 4) 6.0 5) 2 6) 12 M
7) 2020 8) 142,214,241,412 9) 106 10) 1875

(08)
1) பம்பரகந்தை 2) தாதுசேனன் 3) மின்னேரியா
4) சித்திரை 5) ISO

(09)
1) மாகாணம் 2) மாவட்டம்

(10)
1) கவரும் 2) கவராது

(11)
தென்சிலுவை

(12)
1) யுனிசெவ்
2) இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம் (ரெலிகொம்)

(13)
1) புஸ்தகாலய 2) விதுஹல்பதி

(14) பொருத்தமான வசனங்கள்

### புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :
40x2½ = 100 புள்ளிகள்

வினாத்தாள் II :
1) 18 புள்ளிகள் 2) 4 புள்ளிகள்
3) 10 புள்ளிகள் 4) 4 புள்ளிகள்
5) 10 புள்ளிகள் 6) 7 புள்ளிகள்
7) 20 புள்ளிகள் 8) 5 புள்ளிகள்
9) 2 புள்ளிகள் 10) 2 புள்ளிகள்
11) 2 புள்ளிகள் 12) 2 புள்ளிகள்
13) 2 புள்ளிகள் 14) 12 புள்ளிகள்
100 புள்ளிகள்


## இந்தியாவில் கல்வி கற்க வாய்ப்பு

2005 உயர்தரப் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் இணைந்து கொள்ளலாம்.

பிருந்தாவன் கல்லூரி

முன்னாள் தேசிய முதல்தரக் கல்லூரி

பெங்களூர் பல்கலைக்கழகத்தால ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பட்டப் படிப்புக்கான பாடநெறிகள்

B.B.M. - தொழில் முகாமைத்துவம்
B.Sc.- விஞ்ஞானம்
BCA.- கணனி பிரயோகம்
B.Com.- வணிகம்
Computer - கணனி

பட்டப்பின் படிப்புப் பாடநெறிகள்

MBA, MSc, -MCA

இலவச கருத்தரங்கும் சந்திப்பின்போதே அனுமதியும்: கொழும்பு ஹில்டனில் யூலை 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை



## நீர்வேலி மேற்கு மாலை வைரவர் தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா- 2005

எமது ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 24.06.2005 வெள்ளிக்கிழமை இரவு 10மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெற்று மறுநாள் 25.06.2005 சனிக்கிழமை காலை 7 மணியளவில் எம்பெருமானுக்கு விசேட பொங்கல் பூசைகள் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் வருகைதந்து வைரவப் பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுயயும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

(36912) (39-15-34)



## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**வினாசித்தம்பி பொன்னுத்துரை**

யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் தன்னிகரில்லாத நல்லாசானாய், கண்ணியமான உப அதிபராய், கடமையுணர்வுள்ள அதிபராய் (1978– 1989) பன்னிரண்டுகளாய் பணிசெய்தீர். ஒழுக்கத்துடன் கல்வியுந் தந்தீர். அனைவரின் நெஞ்சங்களிலும் 'பொன்னர்' ஆக பதிந்து நின்றீர். பிரிந்ததை தாங்கவொண்ணாது துயருறுகின்றோம். தங்கள் பாதக்கமலங்களில் கண்ணீர் சொரிந்து செலுத்துகின்றோம் அஞ்சலியை மெமோறியல் அன்னையின் பழைய மாணவர்கள் நாம். சாந்தி!

பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி.

(36910) (39-15-34)



## 22.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200385264 இலிருந்து 200400647 வரை

சீட்டிழுப்பு இல. 1617

10 21 25 51 சுப்பர் எண் 09

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 24 | 5,000/- | 1,20,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 407 | 1,000/- | 4,07,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,288 | 500/- | 6,44,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,605 | 40/- | 7,84,000/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,706 | 20/- | 3,74,120/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,79,129 | 10/- | 27,91,290/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 20,00,000/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 27,45,550/-

தொடர் இல. 300365039 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜுன் 22 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

200390173-2-58
200386795-1-30
200386746-3-51
200390581-2-07
200393747-0-86

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## எமது இதயம் விட்டுப் பிரியாத குட்டியின் 31ஆம் நாள் கண்ணீர் பூக்கள் சபிண்டீகரண அழைப்பு

தாயில் பூர்த்தது 25~05~1987

மண்ணில் சாய்ந்தது 25~05~2005



அமரர் **சிவநாதன் லீங்கேஸ்வரி** (குட்டி)
(மாணவி, பளை மத்திய கல்லூரி)

*ஆண்டுகள் ஆயிரம் ஓடி மறைந்தாலும் எங்கள் அன்புக் குட்டியின் சிரிப்பு மாறாது எம் இதயத்தில்*

இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

*இச்சாய் வெளி, பளை.* (சி-43624)(30-35-12-16) சிவநாதன் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 06 ~ 11 ~ 1942

ஆண்டவன் அடியில் 25 ~ 05 ~ 2005



அமரர் **இராசையா இராசரத்தினம்** (சின்னராசா)

இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

*மீசாலைவடக்கு, கொடிகாமம்.* (36921)(30-35-12-16) - குடும்பத்தினர். T.P.: 077-6171403

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 15-03-1921

உதிர்வு 25-05-2005

திருமதி **முருகேசு முத்தாச்சிப்பிள்ளை**

25.05.2005 அன்று சிவபதமடைந்த அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சீனட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.* (36922)(30-35-12-16) - குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 ~ 11 ~ 1951

இறப்பு 06 ~ 07 ~ 2004



அமரர் **வினாசித்தம்பி குணசேகரம்**

திதி - 24.06.2005

ஓராண்டு கடந்ததையா உன்னை இழந்து!
நீராண்ட விழிகளுடன் நெஞ்சம் துடிக்கிறது!
சீராண்ட வாழ்வாய் சிறந்திட்ட தெய்வம் நீ!
ஆராலே முடியும் ஐயாவுனை மறக்க!

பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (36920)(30-35-12-16) - குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 05 - 09 - 1930

மறைவு 25 - 06 - 2002



அமரர் **தம்பையா பரநிருபசிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: பிரதமை 23-06-2005

அன்பால் எம்மை அணைத்து அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் பலர்போற்ற பாரினில் வந்திட்ட எம் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் ஆறாதப்பா - உங்கள் பிரிவு
என்றும் உங்கள் முகம் நெஞ்சினிலே நின்று - நிலைத்திருக்கும்

7ஆம் வட்டாரம், நயினாதீவு. (36917)(46-30-12-16) - குடும்பத்தினர்.

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்24

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிககிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கந்தசாமி
(வேலணை, வங்களாவடிச் சந்தி, குமரன் கூல்பார் உரிமையாளர்)



4ஆம் வட்டாரம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(36930)(30-13-16)

தகவல்: விஜயகுமார் (குமார் - மகன்) (குமரன் உணவகம், திருநெல்வேலி).

*4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு.*

### திருமதி கௌரி நடராஜா

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரி நடராஜா அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேகவர்ணனின் சிறிய தாயாரும், அருட்சோதி வர்ணன் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கலாவர்ணன் (முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை), ஆகியோரின் அன்புத தாயாரும், ஞானேஸ்வரி சந்திரா, கெங்கேஸவரி (ஆசிரியை, யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமியாரும் அருட்செல்வி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சியாம் வர்ணன், பிருந்த வர்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந.அருட்சோதி வர்ணன். (மகன்)
ந.கலாவர்ணன் (மகன்).
0776-983646.

*இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.* (36932)(30-13-16)


## ஆங்கிலம்

பயிற்றப்பட்ட ஆசிரியர், வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும் கடித மூலம் உடன் தொடர்பு கொள்ளவும்

ஆசிரியர்,
443, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
0712-357974 (9 p.m.)

(36927)(30-35-13-16)

ராஜா யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த

சந்திரமுகி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த

ஜித்தன் (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (பி.நே.)

நாதன்ஸ் சினிமா குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இன்று (23.06.2005) வியாழன் முதல்
Colin, Tarial, Anjelinapolice and antony Hopkins நடித்த

ALEXANDER

(ரீல்ஸ்) அலெக்சாண்டர் (ஆங்கிலம்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)

(சி-43363) (24-25-18-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வுகளும்



தோற்றம் 02-12-1957

மறைவு 12-05-2005

அமரர் **சோமசுந்தரம் சத்தியமூர்த்தி**
(கண்ணழகு)

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (25.06.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ.ஜி.ஏ.ஒழுங்கை, வல்வெட்டித்துறை. (சி-43625)(30-35-12-16) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் பறுபதம்



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பறுபதம அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அம்பலவாணரின் அன்பு மனைவியும் சிற்றம்பலம், திலகவதி, புனிதவதி காலஞ்சென்ற லோகநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கணேசன், வரதராசா மற்றும் திலகவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊற்றலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி இல்லம், கைதடி கிழக்கு, கைதடி.* (36925)(30-12-16) தகவல்: பிள்ளைகள்.

### வேதநாயகம் மரியறெஜீனா (ஞானரத்தினம்)



மணற்காட்டைச் சேர்ந்த வேதநாயகம் மரியறெஜீனா (ஞானரத்தினம்) அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதநாயகம் சுவக்கீன் சம்மாட்டியாரின் அன்பு மனைவியும் செம்பியன்பற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற லீனட்பு - இரத்தினம்மா ஆகியோரின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்றவர்களான சந்திரேஸ் - சுவக்கீனம்மா ஆகியோரின் மருமகளும் யோச், எட்வேட் (லண்டன்), பிறேமா (இத்தாலி), கனிமா, ஜெனிமா (லண்டன்), றசீமா காலஞ்சென்றவர்களான ஜெசீமா, கனியூட் (கடற்கரும்புலி கப்டன் மணியரசன்), ஸ்ரலா (லண்டன்), லடிஸ, சாந்தகுமார், டேவிட் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஜெறாட், ஜெயமணி, பியதாஸ், குணம், ஜெயம், இருதயறாஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியநாயகி, அந்தோனிக்கம்மா காலஞ்சென்ற பிரான்சிஸ்க் அம்மா, ஞானப்பிரகாசம் காலஞ்சென்ற றோஸ்மலர், இயேசுதாசன் (இத்தாலி), அன்னபூரணம், ஜேன்ஸ், குணசீலி, வசந்தி, றஞ்சினி, வசந்தினி ஆகியோரின் மைத்துனியும், டினோசன், ஸ்ரெபானியா, டலூசியன், டிலக்சன், சதூசன், மயூரி, சுலக்சன், யூரியா, செறோபியன, சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (25.06.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு மணற்காடு, புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும். இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து மணற்காட்டு சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேதநாயகம், மணற்காடு, குடத்தனை.* (36926)(30-12-16) தகவல்: பிள்ளைகள்.

### திருமதி தாமோதரம்பிள்ளை நாகம்மா

தாமோதரம்பிள்ளை நாகம்மா அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், அமரர் இராமு தாமோதரம்பிள்ளையின் பிரிய பத்தினியும், சுந்தரலிங்கம், சுபேந்திரன், சந்திரவதனா, லோகவதனா, கமலவதனா, அமரர் இராமகிருஸ்ணன் ஆகியோரது பாசமிகு தாயாரும், பிரபாகரன் (யாழ். போதனா வைத்தியசாலை, நீர் விநியோகப் பகுதி), குணநாதன், மோகனதாஸ், தயாளபூபதி, ஜெயந்தாதேவி ஆகியோரது மாமியாரும் தங்கம்மா, சுப்பிரமணியம், தங்கவடிவேல் ஆகியோரது சகோதரியும், இராசமமா, அன்னம்மா, சிவப்பிரகாசம், கனகசபை, பரமேஸ்வரி, தவமணி, செல்வராணி, தங்கவேலாயுதம் ஆகியோரது மைத்துனியும் மதன், மதியழகன், பிரகலாத், சசிகலாத், வனதீபன், தனுராஜ், பாமதி, வத்சலா, துவாரகா, ரம்யா, நவநீதி, துஷிதா, அஸ்வினி ஆகியோரது பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மந்திகை கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அத்தாய், அல்வாய்.* (சி-43627)(30-12-16) தகவல்: சி.பிரபாகரன் (மருமகன்).

### செல்லத்துரை தம்பிராசா

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை தம்பிராசா அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், பரிபூரணம் அவர்களின் அன்புக் கணவரும், நவராஜசேகரன் (லண்டன்), சிறீதரன் (ஜேர்மனி), ரோகினிதேவி (பிரானஸ்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), மனோகரன் (லண்டன்), அமரர் பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வயானை (லண்டன்), கலைவாணி (ஜேர்மனி), திருச்செல்வம் (பிரான்ஸ்), பிரணவன் (பிரான்ஸ்), றூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷா, யோசுவா, மயூரன், செந்தூரன், பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, குணரத்தினம் மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் றோட், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.* (36923)(30-12-16) தகவல்: பரிபூரணம் (மனைவி).

# சபையில் நகலைச் சமர்ப்பிக்க மறுத்தார் பிரதமர் ராஜபக்ஷ!

## ஜனாதிபதிக்கு முகத்தில் அடித்தால்போல பதில்

கொழும்பு,ஜூன்24

பொதுக்கட்டமைப்புச் சம்பந்தமான அரசாங்கத்தின் யோசனையை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்தவேண்டுகோளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஏற்கனவே, இந்தப் பொதுக்கட்டமைப்பு யோசனைகளை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஸ்ட உறுப்பினரும் பிரதி பாதுகாப்புத்துறை அமைச்சருமான ரட்னசிறி விக்கிரமநாயக்காவை கோரியிருந்தார். ஆனால், அமைச்சர் விக்கிரமநாயக்கவும் அதற்கு இணங்க மறுத்துவிட்டார் எனத்தெரிகிறது.

இதனையடுத்தே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த யோசனைகளை சபைக்கு முன்வைக்க வேண்டுமென ஜனாதிபதி அவரிடம் கோரியுள்ளார். ஆனாலும், இதனை நிராகரித்திருக்கும் பிரதமர் தான் காணாத - அறியாத - ஒருவிடயத்தை தமக்கு விளக்கம் தெரியாத விடயத்தை - தம்மால் சபைக்கு முன்வைக்க முடியாதென்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காகத் தாம் ஓர் இனவாதி அல்ல என்றும் இனவாதமாகச் சிந்தித்தோ அல்லது அதன் காரணமாகவோ இவ்வாறன தீர்மானத்தை தாம் எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கும் பிரதமர், முழுமையாகத் தெரியாத ஒரு விடயத்தைப் பற்றித் தம்மால் நாடாளுமன்றத்துக்கு கூறமுடியாது என்று ஆணித்தரமாக தெரிவித்துவிட்டார் - எனக் கூறப்பட்டது. அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயக்கம் காட்டியதை அடுத்து சமூக சேவைகள் அமைச்சர் சுமேதா ஜீ.ஜயசேன அல்லது அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி ஊடாக இதனை இன்று சபையில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது - எனத் தெரிகிறது. (எ-க)

### ஊடகவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவமதிப்பதை யாழ். வைத்தியசாலை நிர்வாகம் உடன் நிறுத்தவேண்டும். அத்துடன், இச் சம்பவம் தொடர்பாக அமைச்சு உடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஊர்காவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை பாலையடிச் சந்தியில் ஆரம்பிக்கும் இந்தப் பேரணி நகரை வந்தடைந்து அங்கிருந்து ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையை வந்தடையும். அங்கு உதவி அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும்.

தீவக மக்களின் அபிவிருத்தி நலன் காப்பகம், தீவக மகளிர் அணி என்பன இந்தக் கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன என்றும் -

தீவக மக்கள் பேரணியில் அணிதிரண்டு பங்கேற்று தமது கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் -

தீவகம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-203-86)

### நாடாளுமன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அரசுத்தரப்பு அமைச்சர்களும், எம்.பிக்களும் இன்றுகாலை கொழும்பு றேஸ்கேஸ் மைதானம் மற்றும் விமானப்படைத் தலைமையகத்துக்கு அருகில் உள்ள மைதானம் ஆகியவற்றில் இருந்து நாடாளுமன்றத்துக்கு இன்று ஹெலியில் கூட்டிச்செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர்களுக்கு நேற்றிரவு தகவல் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு அந்த வசதி வழங்கப்படுமா என்பது தெரியவரவில்லை. (எ-க)

### சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிலேயே வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இவ்வாறு கோரியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேர்த் திருவிழாவில் பங்குபற்றி விட்டு யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் நடைபெற்ற பஸ் - வான் விபத்தில் காயமுற்றவர்களின் விவரங்களைச் சேகரிக்க யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற எமது சகோதர ஊடகவியலாளர்களை அநாகரிகமான முறையில் கெட்டவார்த்தைகளால் தூசித்து, 24ஆம் வார்டில் இருந்து பிடரியில் தள்ளிவெளியேற்றிய ஆண்தாதியின் செயலையும் அந்தத் தாதியின் சண்டித்தனத்தை ஆதரித்து போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் ஒத்தாசை நடவடிக்கையையும் எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சம்பந்தப்பட்ட இரு ஊடகவியலாளர்களும் 24ஆம் வார்ட்டில் பணிபுரியும் தாதி ஒருவரின் அனுமதிபெற்றே வார்ட்டுக்குச் சென்று விபத்தில் காயமுற்றவர்களின் பெயர்களைத் திரட்டிக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் மது போதையில் நின்றதாகக் கூறப்படும் ஆண் தாதியின் பண்பற்ற செயல், தாதிமார் சேவைக்கு இழுக்கைத் தேடியுள்ளது. சட்ட திட்டங்கள் ஒருபுறம் இருக்க சமூகப்பொறுப்புடனும் மனிதாபிமான ரீதியிலும் இச்சம்பவத்தைப் பார்க்கும்போது யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் வெட்கித் தலைகுனியவேண்டும்.

இதுசம்பந்தமாக சுகாதார அமைச்சு பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்தி சம்பந்தப்பட்ட ஆண்தாதி மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என எமது சங்கம் வேண்டுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### இன்று நாடாளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் நேற்றுக் கூறின. இதுதொடர்பில் ஜனாதிபதி நேற்றுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடி இருக்கின்றார்.

அரசமைப்பின்படி எந்தவேளையிலும் நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. 2000ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் அரசமைப்புத் திருத்தத்துக்கான யோசனைகளை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடாளுமன்றத்தின் காலத்திலும் அவர் ஒரு தடவை நாடாளுமன்றத்துக்குச் சென்று சபை அமர்வின்போது சற்றுநேரம் சபையில் அமர்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது (எ-க)

### ஹெல்கிஸன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை விடர் ஹெல்கிஸன் பிரதமரிடம் விவரித்தார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார். (எ-க)

### நெருக்கடி நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம், பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் நகல் பிரதிகள் இன்று மும்மொழியிலும் நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றது. அவை அரச அச்சகத்தில் அச்சிடப்படுவதையொட்டியே அந்த பாதுகாப்பு ஏற்பாடு என வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

### அஸ்கிரிய பீடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அஸ்கிரிய மைதானத்தை சென்றடைந்த ஜனாதிபதி நேராக கண்டி தலதா மாளிகைக்குச் சென்றார். ஜனாதிபதியுடன் நிதியமைச்சர் சரத் அமுனுகம, மத்திய மாகாண ஆளுநர் மொன்டி கொபல்லாவ ஆகியோரும் சென்றிருந்தனர்.

தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் வண.உடுகம புத்தரகித்த தேரருடன் சுமார் அரைமணிநேரம் பேச்சு நடத்திய ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு யோசனையின் இறுதிக் கட்ட நகலையும் அவரிடம் வழங்கினார். இதனையடுத்து, ஜனாதிபதியை மகாநாயக்க தேரர் ஆசீர்வதித்தார் எனத் தெரிகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனைகளை அரசு இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்து ஜனாதிபதி நேற்றைய சந்திப்பின்போது மகாநாயக்க தேரரிடம் விளக்கமளித்துள்ளார்.

மல்வத்த பீடாதிபதி வண.திப்பட்டுவாவே சுமங்கள தேரர் இரத்தினபுரிக்குச் சென்றுள்ளதால் ஜனாதிபதியினால் அவரைச் சந்திக்க முடியாமற்போனது (எ-க)

## பொதுக்கட்டமைப்பின் நகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வியால் அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

"ஜனாதிபதியால் நாட்டு மக்களின் விருப்புக்கு மாறாக - கள்ளத்தனமாகவும் புலிகளை திருப்திப்படுத்துவதற்காகவும் - முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு விடயம் கைச்சாத்திடப்பட்டுவிட்டதா என்பதே எனது கேள்வி. அதற்கு உரிய பதிலே எனக்கு வேண்டும்!" விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்று சபையில் வலியுறுத்தினார்.

சபை முதல்வரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவை இதற்கு உரிய பதிலை வழங்குமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, பதிலளித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாளை (அதாவது இன்று) இந்தச் சபையில் இதனை விவாதத்துக்கு நாம் சமர்ப்பிக்கும் போது அது கைச்சாத்திடப்பட்டுவிட்டதா, இலலையா? என்பது பற்றி அறிவிப்போம்"- என்றார்.

இதனையடுத்து, நேற்று எதிர்க்கட்சியின் ஆசனங்களில் அமர்ந்திருந்த ஜே.வி.பியின் எம்.பிக்கள் அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

இதற்கு மத்தியில் அரசை கடுமையாக சாடினார் விமல் வீரவன்ஸ. பொதுக்கட்டமைப்பில் அடங்கியிருக்கும் விடயங்கள் பற்றி மகாநாயக்கர்களுக்கு எடுத்துக்கூறாமல் அவ்விடயத்தில் கைச்சாத்திடமாட்டேன் என்று மகாநாயக்கர்களுக்கு வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி இன்று அதற்கு மாறாக செயற்படுகிறார். இந்தத் துரோகத்தனமான செயலுக்கு எதிராக நாட்டுப்பற்றாளர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டுவர்கள் இந்தச் சபையில் இருந்து அந்த நகலைத் தூக்கியெறிவதற்கான நடவடிக்கையில் நாம் ஈடுபடுவோம்.

எமக்குக் கிடைத்த தகவலின்படி பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுவிட்டது. நாளை அது நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது ஜனாதிபதி தனது பிள்ளைகளுடன் விடுமுறையைக் கழிப்பதற்காக நுவரெலியாவுக்குச் செல்கிறார் என்றும் நாம் அறிந்தோம். எமது தாய்நாட்டுக்கு அவர் செய்துள்ள துரோகத்தனத்தை இந்த நாடு ஒருபோதும் மன்னிக்காது - என்றார் விமல் வீரவன்ஸ.

மகாநாயக்கர்களுக்குப் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தொடர்பான விடயங்கள் இன்று (அதாவது நேற்று) ஜனாதிபதி மாளிகையில் வைத்து தெளிவுபடுத்தப்பட இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் - உத்தேச பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் செய்யபபடுவதற்கான ஏற்பாடுகளை அறிவிப்பதற்காகவும் அதனை பரிசீலனைக்கு சமர்ப்பிப்பதற்காகவும் விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை நேற்றிரவு ஜனாதிபதி அழைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-க)


### கணினிப் பயிற்சி நெறிகள்

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

- Diploma in Microsoft Office 2003
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Video Mixing
- Diploma in Accounting Package
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming

3-5 Months

ஆரம்பம் 27.06.2005 - 03.07.2005 (சி-43557)

மேலதிக விபரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 021-222 3335, 0773 151200

### நாடகமும் அரங்கியலும்

M.அருள்சந்திரன் 2006-8.30 a.m. 2007-10.30 a.m. சனி, ஞாயிறு.

எனது வகுப்புகள் D.C.C.Aயில் மட்டுமே நடைபெறும்.

புதிதாக இணைபவர்களுக்கு முதலில் இருந்து ஆரம்பிக்கப்படும். (36822)

D.C.C.A ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### இடம்மாற்ற அறிவித்தல்

கல்வியங்காட்டில் இயங்கிய ஏகாம்பரம் பல்பொருள் வாணிப நிலையத்தை இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்வியங்காட்டில் திறக்கவுள்ளோம் என்பதனை அன்புடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (36301) ஏ.பாஸ்கரன்


### மரண அறிவித்தல்

**ஆறுமுகம் பூமிபாலன்**

வேலணை கிழக்கு, வேலணை 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பூமிபாலன் அவர்கள் நேற்று (23.06.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்ள இன்று (24.06.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு.* (36933)(30)

தகவல்: - குடும்பத்தினர்.




EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.